இலவச பிரதி
Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 திருவள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை-19 04-12-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை-290




S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-13510)


# யுத்தநிறுத்த உடன்பாட்டை அமுலாக்கின் மனித உரிமைகளைப் பாதுகாக்க முடியும்

## சர்வதேச மன்னிப்புச்சபை பணிப்பாளரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு


(கிளிநொச்சி)

*தமிழர்தாயகத்தில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசாங்கம் முழுமையாகச் செயற்படுத்துவதன் மூலம் மனித உரிமை மீறல்களை முடிவிற்குக்கொண்டுவரமுடியும் என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்றுத் தெரிவித்துள்ளார்.*

கிளிநொச்சியில் நேற்று சு.ப. தமிழ்ச்செல்வனைச் சர்வதேச மன்னிப்புச் சபையின் பணிப்பாளர் ஐரெனி சுபைடா கான் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின் போதுதமிழர் தாயகத்தில் நிலவும் அரசியல் நிலைமைகள்குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன் விளக்கினார். அப்போது அவர் தெரிவிக்கையில், இரு தசாப்த கால யுத்தத்தால் சமூக, பொருளாதார அடிப்படையில் பாதிக்கப்பட்டு இடப்பெயர்வுக்குள்ளாகி மனித உரிமைகள் மறுக்கப்பட்டு வரும்தமிழ்மக்களின் வாழ்க்கை முற்றாக இயல்பு நிலைக்குத் திரும்ப யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகச் செயற்படுத்துவதன் மூலமே சாத்தியம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## ஐரெனி-பா.நடேசன் கிளிநொச்சியில் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் பணிப்பாளர் நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்து தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## இரு தமிழர்கள் படுகொலை; திருமலை மூதூரில் பதற்றம்

(திருமலை)

திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்த வன்முறைச் சம்பவங்களில் இரு தமிழர்கள் கத்தி வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

தோப்பூர் பிரதேச ஐக்கிய தேசியக்கட்சி இணைப்பாளரான காஜாமுகைதீன் என்பவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுடப்பட்டதையடுத்து இந்தப் படுகொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன.

மூதூரிலிருந்து தோப்பூரிலுள்ள தனது வீட்டிற்கு உந்துருளியில் காஜாமுகைதீன் திரும்பிக்கொண்டிருந்த போது அவரது வீட்டிற்கு அருகாமையில் வைத்து அவர் மீது அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத் தியுள்ளனர். இதில் காஜா முகைதீன் படுகாயமடைந்தார்.

காஜாமுகைதீன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து மூதூர் பிரதேசத்தில் பதற்றநிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சிலர் வன்முறைகளிலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் மீது இரு வேறுதாக்குதல்; படையினரின் சூட்டில் பொதுமகன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணநகரப்பகுதியில் நேற்று இராணுவத்தினர் மீது இரு வேறு கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதையடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியை அண்மித்த கந்தர்மடம் சிறிலங்கா இராணுவ சோதனைச்சாவடி மீது நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினர் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதில் அளவெட்டியைச் சேர்ந்த எல். கோபிராஜ் (வயது-29) என்ற இளைஞர் படுகாயமடைந்தார். யாழ். மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் தற்போது அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் இராணுவச் சிப்பாய் துப்பாக்கிச் சூட்டில் பலி

*-மீசாலையில் படையினர் மூவர் தாக்குதலில் காயம்*

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று மாலைஇடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் சிறிலங்கா இராணுவச்சிப்பாய் ஒருவர் பலியானார். உழவு இயந்திரத்தில் பயணித்துக்கொண்டிருந்த படையினர் மீது சாவகச்சேரி இந்துக்கல் லூரிக்கு அண்மையில் வைத்து இத்துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதேவேளை மீசாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மூன்று கைக்குண்டு வீச்சுக்களில் மூன்று படையினர் காயமடைநதுள்ளனர். இதன் போது மீசாலைச் சந்திக்கு அண்மையில் இரு கைக்குண்டு வீச்சுக்க ளும், மீசாலை சிறிலங்கா இராணுவ முகாமருகே ஒரு குண்டுவீச்சும் இடம்பெற்றுள்ளது.காயமடைந்த படையினர் உடனடியாகப் புத்தூர் சந்தி இராணுவ முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் உலங்குவானூர்தி மூலம் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

## வடமராட்சியில் கைக்குண்டுத் தாக்கு; மூன்று படையினர் படுகாயம்

வடமராட்சியின் மாலுசந்திப்பகுதியிலுள்ள சிறிலங்கா ரெலிகொம் பரிவர்த்தனை நிலையத்திற்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த படையினர் மீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப் பட் டுள்ளது.இதில் மூன்று படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 6-10 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. கைக்குண்டுத்தாக்குதலையடுத்து படையினரும் பதில் தாக்குதலை மேற்கொண்டபோதும் தாக்குதலை நடத்தியோர் தப்பித்துச்சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை படுகாயமடைந்த படையினர் மூவரும் உடனடியாக இராணுவ வாகனங்களில் ஏற்றப்பட்டு பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளனர். இதனிடையே பரிவர்த்தனை நிலைய பணியாளர்கள் அங்கிருந்து முன்னதாகவே வெளியேறியிருந்ததால் அவர்கள் தரப்பில் சேதமேதும் ஏற்பட்டிருக்கவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.சபைத் தூதுவர் நாளை அரசியல்துறைப் பொறுப்பாளருடன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

நாளை இச்சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வரும் எட்டாம் திகதி கிளிநொச்சிக்கு வருகைதரும் நோர்வே விசேடதூதுவர் சுனாமியால் அழிவடைந்த முல்லை. நகரைச் சென்று பார்வையிடுவார் எனவும், ஒன்பதாம் திகதி தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேசுவார் எனவும் தெரியவருகிறது. (ச)

## பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி நுழைவாயிலில் படையினரின் அரண்

பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி நுழைவாயில் பகுதியில் சிறிலங்காப் படையினரால் புதிதாக பாதுகாப்பு மண்அரண்களும் முட் கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.நூறு மீற்றர் தூரத்திற்கு 15 அடி உயரத்திற்கு இந்த அரண் அமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை இக்கல்லூரியின் பின்புறமாக ஏற்கனவே படையினர் அரண் அமைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (கா)

## நீர் வேலியில் நேற்றும் ஹர்த்தால்; யாழ். பருத்தித்துறை வீதி துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப்பிரிவினரால் இரு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நீர்வேலிப் பகுதியில் நேற்றும் இரண்டாவது நாளாக பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதியில் ரயர்கள் எரிக்கப்பட்டன. வீதிகளில் குறுக்காக மரங்கள் மின்கம்பங்கள் என்பன போடப்பட்டு போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டது.

இதனால் பருத்தித்துறை வீதியில் போக்குவரத்து நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன (கா)

## சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டிசம்பர் 16இல் இந்தியா பயணம்

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்று நாள் பயணமாக எதிர்வரும் 16ஆம் திகதிஇந்தியா செல்லவுள்ளார்.

இந்தியப் பயணத்தின்போது தமிழீழ விடுதலைப்புலிகளுடனான அமைதி முயற்சிகள் மற்றும் இந்திய-சிறிலங்கா உறவுகள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் மகிந்தராஜபக்ஷ ஆலோசனை நடத்துவார்.

இருப்பினும் மகிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் தொடர்பில் உறுதியான அறிவித்தல் வெளியிடப்படவில்லை. சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் இந்தியப்பயணத்தின்போது இது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டதாகவும் இதையடுத்து டிசம்பர் 16ஆம் திகதிமகிந்தராஜபக்ஷ இந்தியா செல்வார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நடமாடும் பற்சிகிச்சை

பாரதி இல்லத்தில் தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தலிலும், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரின் அனுசரணையுடனும் பற்சுகாதாரம் வாய்ப்புற்று நோய் சம்பந்தமான கருத்தரங்குகளும், பற்சிகிச்சையும் இன்று நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சு.க.தலைவர் பொறுப்பையும் கைப்பற்ற மகிந்த தீவிரம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பொறுப்பை மகிந்தராஜபக்ஷவிடம் ஒப்படைக்குமாறு சந்திரிகாவிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு மகிந்தவின் ஆதரவாளர்கள் தீர்மானித்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் காலத்தில்பல தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை மகிந்தராஜபக்ஷ வகிப்பதுதான் அந்த தேர்தல்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவியாக அமையும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தற்போது கட்சியின் உப தவிசாளராக இருக்கும் மகிந்தராஜபக்ஷவைத் தலைவராக்குவதே கட்சியின் பெரும்பான்மையானவர்களின் எண்ணமாக உள்ளதாகவும் இதுகுறித்து தாங்கள் சந்திரிகாவைச் சந்தித்து இந்த யோசனையை முன்வைக்க உள்ளதாகவும் அக்கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் கூறினார்.

கட்சியின் தலைமையை மகிந்தவுக்கு வழங்கும் அதே நேரத்தில் சந்திரிகாவுக்கு கட்சியினுள் கௌரவமான பதவியை வழங்குவதற்கும் மாற்று யோசனையும் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

எனினும் சந்திரிகாவுக்கு வழங்கப்படவுள்ள பொறுப்புகள் குறித்து இதுவரை இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது.





## 21 ஆவது ஆண்டில் TRO தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இருபது ஆண்டுகாலமாக பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் முன்னெடுத்துவந்த மனிதாபிமானப் பணிகளுக்கூடாகவும் மீள்வாழ்வுக்கான செயற்பாடுகளுக்கூடாகவும் ஓர் புதிய பரிமாணத்துடன் 21 ஆவது ஆண்டில் கால்பதிக்கின்றது.

அதனை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் புலம் பெயர்நாடுகள் பலவற்றில் பல்வேறு நிகழ்வுகள் நடாத்தப்பட்டுவருகின்றன. எமது தாயகத்திலும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன. அதற்கமைய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடகப்பிரிவு இரண்டு வெவ்வேறு போட்டிகளை நடாத்துகின்றது.

01) ஒளிப்படத் தொகுப்புப் போட்டி
02) புகைப்படத் தொகுப்புப் போட்டி

இவ்விரு துறைகளிலும் ஆர்வமுள்ளவர்கள் எவரும் பங்குகொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன.

- இருபது ஆண்டு காலமாக போர்ச்சூழலாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிப்பிற்குள்ளாகிய மக்கள் எதிர்நோக்கிய இடப்பெயர்வுகள், சமூகப் பொருளாதாரரீதியாக எதிர்நோக்கிய பின்னடைவுகள், மக்கள் மத்தியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவந்த மனிதாபிமானப் பணிகள்,மீள்வாழ்வுக்கான புனர்நிர்மாண செயற்பாடுகள் என முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதான காலப்பதிவுகளாக இருத்தல் வேண்டும்.

- ஆக்கத் தொகுப்புக்கள் தெளிவானதாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும். ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட காட்சிகளாயின் அவை எங்கு, எப்போது. யாரால் பதிவுசெய்யப்பட்டனபோன்ற சான்றுகளும் இணைக்கப்படுதல் வேண்டும்

ஆக்கத் தொகுப்புக்களில் பிரதானமாக உள்ளடக்கப்பட வேண்டியவை.

01) காட்சிகளால் கதைசொல்லும் முறை
02) சொல்லவரும் செய்திகளின் தெளிவு
03) ஆர்வத்தைத் தூண்டும் பண்பு
04) காலத்தின் பதிவு
05) தொழில்நுட்ப நேர்த்தி

ஆகிய அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்படுவதோடு, அவற்றிற்கு முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

இப்போட்டிக்கு வயதெல்லை கிடையாது. தனியாகவோ அல்லது குழுவாகவோ பங்குபற்றலாம்.

- ஒளிப்படத் தொகுப்பு 20-25 நிமிடங்களுக்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும்.

- புகைப்படத்தொகுப்பு 35-40 படங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (படங்கள் யாவும் வர்ணப்படங்களாக இருக்கவேண்டும்)

### ஒளிப்படத் தொகுப்புப் போட்டிக்கான பரிசில் விபரம்

- முதலாம் பரிசு:
  *ஒரு ஒளிப்படப்பிடிப்புக் கருவி*
  (VIDEO CAMERA)
- இரண்டாம் பரிசு:
  *ஒளிப்படப்பிடிப்புக் கருவி*
  (VIDEO CAMERA)
- மூன்றாம் பரிசு:
  *தொலைக்காட்சிப் பெட்டி,*
  *ஒரு DVD ஒளிபரப்புக் கருவி*
  (DVD PLAYER) என்பனவாகும்.

### புகைப்படத் தொகுப்புப் போட்டிக்கான பரிசில் விபரம்

- முதலாவது பரிசு:
  *புகைப்படப்பிடிப்புக் கருவி*
- இரண்டாவது பரிசு:
  *புகைப்படப்பிடிப்புக் கருவி*
- மூன்றாவது பரிசு:
  *புகைப்படப்பிடிப்புக் கருவி*

இரு ஆக்கப்பதிவுகளும் எமக்குக் கிடைக்கப்பட வேண்டிய கால எல்லை.
31.12.2005

*மேற்படி போட்டிகளில் பங்கெடுப்பவர்கள் போட்டிகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கும்,போட்டிக்கான ஆக்கங்களை அனுப்பிவைப்பதற்குமான தொடர்புகளுக்கு,*

ஊடகப்பிரிவு,
நடுவப்பணியகம்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
கிளிநொச்சி,
இலங்கை.

தொலைபேசி இல:- 021-2285956
தொலைநகல்:- 021-2285955
மின்னஞ்சல்:- tronews2005 @yahoo.com

(சி.13423)



அமெரிக்காவில் ஹவாய் எரிமலை தேசிய பூங்காவில் உள்ள எரிமலை வெடித்து அதில் இருந்து வெளியேறும் தீக்குழம்பு அருவி போல் கடலில் கலக்கிறது.

# அரேபியர்கள் ஈராக்கிற்குள் நுழைவதற்கு தடை

(பாக்தாத்)

ஈராக் நாட்டில் வருகிற 15 ஆம்திகதி பாராளுமன்றத் தேர்தல் நடக்கவிருக்கின்றது. இதையொட்டி பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக ஈராக்கியர் அல்லாத அரேபியர்கள் ஈராக்கிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எப்போது இந்தத் தடை இரத்துச் செய்யப்படும் என்பது அறிவிக்கப்படவில்லை.

அமெரிக்க இராணுவமும் ஈராக் படைகளும் அந்நிய நாட்டு தீவிரவாதிகள் குறித்து மிகுந்த கவலை அடைந்துள்ளன. அதனாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.



காஷ்மீரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட திராங்யாரிப் பகுதியில் மக்கள் தற்காலிகக் கூடாரங்களில் தற்கியுள்ளனர். அங்கு கடும் பனிப்பொழிவினால் கூடாரங்களைச் சுற்றிப் பனிக்குவியல்கள் கொட்டிக்கிடக்கின்றன.

# சிறுவர்களைக் கடத்தி பணம் பறிப்பு

(போர்ட் ஆப் பிரின்ஸ்)

அமெரிக்கா அருகேயுள்ள ஹைத் தீவில் ஆயுதம் தாங்கிய சிலர் ஒரு பாடசாலை சென்ற பேருந்தை வழிமறித்து அதில் இருந்த 11மாணவர்களை கடத்திச்சென்றுள்ளனர். இந்தச்சம்பவம் போர்ட் ஆப் பிரின்ஸ் நகரில் நடந்தது.

இந்தச்சிறுவர்களை விடுதலை செய்யவேண்டுமானால் பெருந்தொகை தரவேண்டும் என்று கடத்தல்காரர்கள் கேட்டனர். தாங்கள் இருக்கும் இடம் பொலிசாருக்குத் தெரிந்து விட்டது என்பது கடத்தல்காரர்களுக்குத் தெரியவந்ததும் கிடைத்த இரண்டு இலட்சம் ரூபாயே போதும் என்ற மனநிலைக்கு வந்து விட்டனர். அதைப்பெற்றுக்கொண்டு அவர்கள் சிறுவர்களை விடுவிததனர்.

கடந்த மார்ச்மாதம் முதல் பணத்துக்காக ஆயிரம் பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

# சிங்கப்பூருக்கு போதைப்பொருள் கடத்தியதற்காக அவுஸ்திரேலிய இளைஞர் தூக்கிலிடப்பட்டார்

(சிங்கப்பூர்)

**சிங்கப்பூருக்கு போதைப்பொருளை கடத்திவந்ததாக கைது செய்யப்பட்ட அவுஸ்திரேலிய இளைஞருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. நேற்று முன்தினம் காலை இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.**

அவுஸ்திரேலியாவைச்சேர்ந்தவர் நியூயெண்டு வோங்வான். 25 வயதான இவர் போதைப்பொருட்களைக் கடததி வந்ததாகச் சிங்கப்பூர் அரசு அவரைக் கைது செய்தது. அந்த நாட்டில் போதைப்பொருள் கடத்தலுக்கு மரண தண்டனை வரை கடும் தண்டனை விதிக்கப்படும்.

கைது செய்யப்பட்ட அவர் மீது நீதிமன்றில் வழக்குத்தொடரப்பட்டது. வழக்கைவிசாரித்த நீதிபதி அவருக்கு மரணதண்டனை விதித்தார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டதற்கு, மனித உரிமை அமைப்புக்கள் கடும் எதிர்ப்புத்தெரிவித்தன.

அவுஸ்திரேலிய அரசும் நியூயென் வோங்வானைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொண்டது. மரண தண்டனையைக் குறைக்கும்படி சிங்கப்பூர் அரசை அவுஸ்திரேலிய அரசும் கேட்டுக்கொண்டது. ஆனால் சிங்கப்பூர் அரசு தண்டனையைக் குறைக்க ஒப்புக்கொள்ளவில்லை.

நியூயென் நேற்று முன்தினம் ஆறுமணிக்கு தூக்கில் போடப்பட்டார். இதை சிங்கப்பூர் உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.இந்த நிலையில், அவுஸ்திரேலிய அரச வழக்கறிஞர் பிலிப் ருடோக் இந்த மரண தண்டனையை காட்டுமிராண்டித்தனமானது என்று வ்ணித்தார்.

# இஸ்ரேலின் அதிநவீன ஏவுகணைகள் ஏரோ-2

இஸ்ரேல்நாட்டு இராணுவத்தினர் மற்றும் விஞ்ஞானிகள் ஏரோ-2 என்ற அதிநவீன ஏவுகணையைத் தயாரித்துள்ளனர். ஈரான் அணுவாயுத சோதனையில் தொடர்ந்து ஈடுபடுவதாகவும் சாக்லேட் என்ற புதிய சக்தி வாய்ந்த ஏவுகணை தயாரித்துள்ளதாலும் இஸ்ரேலின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அமெரிக்க உதவியுடன் ஏரோ-2 என்ற அதிநவீன ஏவுகணையை இஸ்ரேல் தயாரித்துள்ளது. 2000 கிலோ மீற்றர் தூரத்திற்கும் அதிகமாகப் பறந்து சென்று எதிரி விமானங்களை நடுவானிலேயே தகர்க்கும் ஆற்றல் உள்ளது இந்த ஏவுகணை, மிக உயரத்தில் ஒரு ஏவுகணையைப் பறக்க விட்டு இந்தப் புதிய ஏரோ-2 ஏவுகணை மூலம் சோதனை ரீதியில் இஸ்ரேல் இராணுவத்தினர் தகர்த்தனர்.

# சீனாவில் இடம்பெறும் சித்திரவதைகள் பற்றி ஐ.நா.சிறப்பு புலனாய்வாளர்கள் தகவல்


(பீஜிங்)

சீனாவின் நகரப்பகுதிகளில் சித்திரவதைகள் குறைந்து வந்தாலும் ஏனையபகுதிகளில் பரவலாக சித்திரவதைகள் இடம்பெறுவதாக ஐக்கிய நாடுகள் சிறப்புப்புலனாய்வாளர் ஒருவர் கூறியுள்ளார்.

சீனாவில் முஸ்லிம்கள் பெருமளவில் வாழும் ஷிங்சியாங் பிரதேசம் மற்றும் தீபத்திலுள்ள தடுப்புக்காவல் மையங்களுக்குச் சென்று வந்தபின்னர் சித்திரவதைப்புக்களை ஆராயும் ஐக்கிய நாடுகள் சிறப்பு அதிகாரி பீஜிங்கில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். தடுத்து வைக்கப்பட்டவர்களைத் தாம் பேட்டி கண்டபோது அதனை ஒட்டுக்கேட்கும் விதமாக சீன அதிகாரிகளின் நடவடிக்கைகள் அமைந்திருந்ததாகவும் குற்றம் சாட்டிய அவர் மேலும் பலரைப் பார்ப்பதற்குத் தன்னை அனுமதிக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டவர்களின் அடிப்படைத் தன்மைகளை மாற்றும் விதமாக கடுழியத்தண்டனை முகாம்களில் உளவியல் ரீதியாக சித்திரவதை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரமாகச் செயற்படக்கூடிய ஒரு நீதித்துறை இல்லாமல் இந்த வழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாதென்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.



மெச்சிக்கோவில் உள்ள லியோன் நகரத்தில் நான்காவது சர்வதேச பலூன் பரசூட் விழா கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு நடந்த விழாவில் கலந்துகொண்டவர்கள் கலர் கலர் பராசூட்டில் தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள்

# ஈராக்கில் நேற்று முன்தினம் மட்டும் 14 அமெரிக்க இராணுவத்தினர் பலி

(பாக்தாத்)

ஈராக் பலுஜாவில் நேற்ற முன்தினம் ரோந்துப்பணியில் ஈடுபட்ட அமெரிக்கப்படையினர் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 11பேர் படுகாயமடைந்துள்ளதாக அமொிக்கப்படைத்தரப்பு அறிவித்துள்ளது.

மேலும் மூன்று அமெரிக்கப்படையினர் வீதி விபத்தில் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் ற மாடிப்பகுதியில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும் மொத்தமாக 14அமெரிக்கபடையினர் நேற்று முன்தினம் ஈராக்கில் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சவுதி அரேபியாவில் பணிபுரிவோருக்கு கட்டாயமாகிறது காப்புறுதித் திட்டம்

(டுபாய்)

சவுதிஅரேபியாவில் பணிபுரியும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு உடல்நல காப்புறுதித் திட்டங்களை அந்நாட்டு அரசு கட்டாயமாக் கியுள்ளது.

சவுதி சுகாதார அமைச்சர் ஹமாத் அல்-மேனி இதுபற்றிக் கூறியதாவது:

சவுதிஅரேபிய நாட்டில் பணிபுரியும் இந்தியர் உள்ளிட்ட வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு உடல்நல காப்பீட்டுத் திட்டங்களை சவுதி அரசு தற்போது கட்டாயமாக்கியுள்ளது. முதல் கட்டமாக 500 மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலா ளர்கள் பணிபுரியும் நிறுவனங்களில் இந்தக் காப்பீட்டுத் திட்டம் அமுல்படுத்தப்படும். இதனைத் தொடர்ந்து 2006 சனவரி முதல் 100 தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்களில் காப்பீட்டுத் திட்டம் அமுலாகிறது. 2006 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து தொழிற்சாலைகளிலும் இந்தத் திட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடிவு செய்துள்ளோம். வீடுகளில் வேலை பார்ப்பவர்களும், சாரதிகளும் இதில் அடங்குவர். இதன் மூலம் அடுத்த பத்து ஆண்டுகளில் சவுதி அரேபியாவின் காப்புறுதி சந்தை ரூ.பத்தாயிரத்து 280 கோடியிலிருந்து ரூ. 30 ஆயி ரத்து 840 கோடியாக அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. என ஹமாத் அல்-மேனி கூறினார்.



ஊனமுற்றோர் தினத்தையொட்டி டில்லியில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் காங்கிரஸ் தலைவி சோனியா ஊனமுற்ற குழந்தைகளுக்கு உபகரணங்கள் வழங்கி அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்

# தாயக மண்ணிலிருந்து துரோகிகளும் படையினரும் ஓடவேண்டிய நிலை விரைவில் உருவாகும்

## திருமலை தமிழ்மக்கள் பேரவை எச்சரிக்கை

(திருமலை)

**எமது தாயக மண்ணில் நடைபெறும் ஈனச் செயல்களுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழ்மக்களின் உள்ளக் குமுறல்கள் உணர்வலைகளாக வெளிக்காட்டும் போது தேசத்து ரோகிகள் சிறிலங்காப் படைகளுடன் சேர்ந்து தாயக மண்ணிலிருந்து ஓட வேண்டிய நிலை ஏற்படுமென்பதை மறவாதீர்கள் என திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை எச்சரித்துள்ளது**

யாழ். மாவட்டம் நீர்வேலிப் பகுதியில் இரு அப்பாவி விவசாயிகள் தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட மையைக் கண்டித்து திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1979 ஆம் ஆண்டை நினைவுறுத்தும் அப்பாவித் தமிழ் மக்கள மீதான படுகொலைகளை வன்மையாகக் கண்டிக் கின்றோம். யாழ். குடாநாட்டில் அரச படைகளும், ஒட்டுப்படைகளும் இணைந்து நடத்தும் நிழல் யுத்தத்தின் ஓர் அங்கமாக பொதுமக்கள் மீதான படுகொலைகள் தொடர்கின்றன. இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள் படுகொலை செய்யப்பட்டபின், நெடுந்தீவு பிரதேசத்தில் தமிழீழ மாவீரர் நிகழ்வில் பங்கு பற்றியோர் மீது கடுமையான தாக்குதல்கள் நடைபெற்றன. தற்போது ஒன்றுமறியாத அப்பாவி ஏழை விவசாயிகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

1979ஆம் ஆண்டு சிறிலங்கா அரசின் அப்போதையை சனாதிபதி ஜெயவர்த்தனா தனது மருமகனான பிரிகேடியர் வீரதுங்கவை அனுப்பி, அவர் தலைமையில் இவ்வாறான படுகொலைகள் பல அரங்கேற்றப்பட்டமையாலேயே எமது விடு தலைப் போராட்டம் வலுப்பெற்றது. இன்று யாழ். குடாநாட்டில் சிறிலங்கா படையும், ஒட்டுப்படைகளும் சமாதானத்தைக் குழப்ப வேண்டுமென்று திட்டமிட்டு இவ்வாறான படுகொலைகளை நடத்துகின்றன.

சுட்டுக்கொல்லப்பட்ட இருவரும் தமிழீழ மாவீரர்நாள் நிகழ்வில் தீவிரமாகப் பங்கேற்றவர்கள் என அறிய முடிகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படும் தமிழ்மக்களுக்கு தண்டனை கொலை என்று தீர்மானிக்கப்பட்டு செய்யப்படும் இச்செயல் மூலம் தமிழ் மக் களை அச்சுறுத்தலாமென எண்ணுகின்றீர்கள். ஆனால் தாயக மண்ணிலிருந்து ஒட்டுப்படைகளும், துரோகிகளும் ஓடும் நாள் மிக விரைவிலேயே உள்ளது. எனவே அதற்கிடையே உங் கள் அராஜகத்தை செய்ய நினைக்காதீர்கள் என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

# ஒதியமலை படுகொலையின் நினைவுநாள் அனுஷ்டிப்பு

சிறிலங்கா இராணுவத்தினரால் 1984 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் ஒதியமலையில் இடம் பெற்றது. நண்பகல் 1.00 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானம் மற்றும் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை மணலாறு களமுனை பொறுப்பாளர் வசந்தன் ஏற்றி வைத்தார்.

ஒதியமலை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் இராசரத் தினம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்புரைகளை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் தண்டுவான் பிரதேசப் பொறுப்பாளர் யோகன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# சர்வதேச மனித உரிமைகள் தினம் கிளிநொச்சியில் கடைப்பிடிக்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச மனித உரிமைகள்தின நிகழ்வு எதிர்வரும் பத்தாம்திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10.00 மணிக்கு நடை பெறவுள்ள மேற்படி நிகழ்வில் நிசோர் நடாத்திய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் உரை, குழுவிவாதம், "இனங்களின் சுயநிர்ணய உரிமை உலக அமைதிக்குப் பங்களிக்கும்" எனும் தலைப்பில் நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (சோ)

# மன்னாரில் பெரு மழையையடுத்து குடிநீரைத் தூய்மைப்படுத்த முயற்சி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலமும் இல்லாதவாறு மழை பெய்தமையினால் மன்னார் நகரத்திலுள்ள தாழ்ந்த பிரதேசங்களான பள்ளி முனை, உப்புக்குளம், தலைமன்னார் எழில்நகர், சாவற்கட்டு, எழுத்தூர் போன்ற கிராமங்களிலுள்ள பொதுக் கிணறுகள், தனியார் கிணறுகளிலுள்ள நீர் பாவனைக்குதவாத நிலையில் சுகாதாரச்சீர்கேட்டுடன் காணப்படுகின்றது. இச் சுகாதாரச் சீர்கேட்டைத் தவிர்ப்பதற்காக மன்னார் பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அனர்த்த முகாமைத்துவ சுகாதார சேவைக் குழுக்களை மன்னார் மாவட்டம் முழுவதற்கும் நியமனம் செய்துள்ளார்.

இக் குழுக்கள் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று சுகாதாரம் தொடர்பான கருத்துரைகளை வழங்கி வருகின்றதுடன் கிணறுகளுக்கு குளோரின் இட்டும் வருகின்றது. (18)

# திருமுறிகண்டி வியாபார நிலையங்களில் சுகாதார நடைமுறைகள் திடீர் ஆய்வு

## -விழிப்புணர்வூட்டலும் நடைபெற்றது

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் சுகாதாரப் பிரிவினரும் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினரும் இணைந்து திருமுறிகண்டிப்பகுதி உண வகங்கள், தேநீரகங்கள், பல் பொருள்வாணிபங்கள், பழ வாணி பங்கள் என்பனவற்றில் உணவுச் சுகாதார ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு சுகாதாரக் குறைபாடுகள் நேரில் அறிவுறுத்தப்பட்டு சீர்செய்ய நட வடிக்கை எடுக்கப்பட்டதுடன் நிலைய நகர சுற்றாடல்கள் மல சலகூடங்கள் என்பன பற்றி ஆய்வு மேற்கொண்டு மலசல கூட சுற்றாடல் சுகாதார மேம்பாட்டிற்கு அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்களுக்கு "மழைக்காலத்தொற்று நோயிலிருந்து எம்மைப்பாதுகாப்போம் எனும் தலைப் பிலான சுகாதார விழிப்புணர்வுக் கருத் தூட்டலும் அதனுடன் இணைந்து உணவுகையாளும் நிலையங்களின் சுகாதாரம் பேணல் தொடர்பிலும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

வர்த்தகர்களுக்கான சுகாதாரக் குழு தெரிவு செய்யப்பட்டு சுகாதார திற்கான செயற்பாடுகள் முன் னெடுக்க ஒழுங்கு செய்யப்பட்டது. அதிகளவிலான சுகாதாரக் குறை பாடுகள் காணப்பட்ட நிலையங்க ளுக்கு அடையாளக் குற்றப்பணங்கள் அறவிடப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

# பூநகரியில் அதிபர், ஆசிரியர்களுக்கு சுகாதாரக் கருத்தரங்கு

(பூநகரி)

பூநகரி கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சுண்ணாவில் அ.த.க பாட சாலை அதிபர் தி.சிவநாதன் தலைமையில் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அகவணக்கத்தைத் தொடர்ந்து அதிபர் தமது தலைமையுரையில் திட்டத்தின் நோக்கம் பற்றி எடுத்துக் கூறினார்.

வலயக்கல்விப் பணிமனையின் பூநகரி கோட்ட சுகாதார இணைப் பாளர் பிரதீபன் இச் செயற்றிட்டத்தின் இலக்கு, குறிக்கோள் பற்றி விரி வாகவும், விளக்கமாகவும் கூறினார். அடுத்ததாக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் தொடர்ந்து பாடசாலைச் சுகாதாரம் தொடர்பாக அதிபர் ஆசி ரியர்கள் எவ்வாறு நடவடிக்கை எடுத் தார்கள் என்பதை அதிபர் ஆசிரியர் களிடம் கேட்டறிந்து அச்சுகாதார நடவடிக்கை பற்றி விரிவாக கருத் துரைகளை வழங்கினார்.

அடுத்து வலயக் கல்விப் பணி மனையின் சுகாதார உடற்கல்வி சேவைகள் ஆசிரிய ஆலோசகர் ஜெயசீலன் உளச் சுகாதாரம், உடல் சுகாதாரம் பற்றிய கருத்துரைகளை வழங்கினார்.

அவரின் கருத் துரைகளைத் தொடர்ந்து பூநகரி தெற்குப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சந்திர சேகரத்தால் தனிநபர் சுகாதாரம், பொதுச் சுகாதாரம், சுத்தமான குடிநீர் தொற்று நோய்கள் என்பன பற்றி விரிவாகவும், விளக்கமாவும் கருத் துரை வழங்கப்பட்டது.

இவரின் கருத்துரைகளைத் தொடர்ந்து தாதிமாரால், பெண்கள் பிரச்சினை தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இறுதியாக கறுக்காய்தீவு அதிபர் சு.கணபதிப்பிள்ளையின் நன்றியு ரையைத் தொடர்ந்து பிற்பகல் 4.00 மணிக்கு கருத்தரங்கு நிறைவு பெற் றது.

இக் கருத்தரங்கு யுனிசெப்பின் நிதியுதவியுடன் வலயக் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது. (34)

# இரு நூல்களின் அறிமுகவிழா

(அலுவலக செய்தியாளர்)

முனைவர் கு. அரசேந்திரனின் தமிழ்க்கப்பல், தமிழறிவோம் ஆகிய நூல்களின் அறிமுகவிழா புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி கலை யரங்கில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சரவணபவான் தலை மையில் எதிர்வரும் ஏழாம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெற வுள்ள மேற்படி நூல்களின் அறிமுக நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப் பிக்கும்வண்ணம் விழா ஏற்பாட்டா ளர்கள் வேண்டியுள்ளனர். (சோ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி வழங்கல்

(நமது நிருபர்)

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒக்ஸ்பாம் மற்றும் வேள்ட்விசன் நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பழம்பாசி,தண்டுவான்,17 ஆம் கட்டை, இத்தி மடு ஆகிய கிராம மக்களுக்கு கடந்த 29 ஆம் திகதி இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் சிவநகர், சின்னச்சாளம்பன்,ஜீவநகர் ஆகிய கிராமமக்களுக்கு 30 ஆம் திகதியும் நிவாரண உதவிகள் வழங்கப்பட் டன.

# கடற்கோள் அனர்த்தத்தால் பாதிப்புற்றோருக்கு நிவாரணம் வழங்கலில் பாரபட்சம்

## உப்புவெளிப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

(திருமலை)

திருகோணமலைப் பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவில் உப்புவெளி பிரதேச கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தியுள் ளனர். தமக்குரிய நிவாரணம் வழங்கலில் பாரபட்சம் காட்டப்படுவதைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க மறுப்பதைக் கண்டித்துமே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கடந்த புதன்கிழமை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்தப்பிரதேசத்தில் 210 குடும்பங்கள் கடந்த கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பின்னர் இந்தப் பிரிவுக்குப் பொறுப்பான கிராம சேவையாளர் மாற்றத்தினைத் தொடர்ந்து புதிதாக வந்த கிராமசேவையாளரினால் 55 குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் 155 குடும்பங்கள் நிவாரணம் வழங்கலில் இருந்து புறக் கணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தே இந்த ஆர்ப் பாட்டத்தைப் பாதிக்கப்பட்ட 210 குடும்பங்களும் சேர்ந்து முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அங்கு வந்த உதவிப்பிரதேச செயலர் திருமதி சசிதேவி ஜலதீபன் ஆர்ப்பாட்டம் நடத்தியோருடன் கலந்து பேசி நிவாரணம் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்யவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.



# ஈழத்தமிழர் போராட்டத்தை ஓவியமாக வரைந்து தமிழர் பிரச்சினையை உலகறியச் செய்வேன்

## - யாழ். பல்கலையில் தமிழக ஓவியர் புகழேந்தி -



யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற தனது ஓவியப் படைப்பான 'புயலின் நிறங்கள்' நூல் வெளியீட்டு விழாவில் ஏற்புரை வழங்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(வலிகாமம்)

**எமது தமிழகத்திற்கு மிகவும் சமீபத்தில் இருக்கும் தமிழீழப் போராட்டதையும் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட துன்ப துயரங்களையும் ஓவியங்களாகத் தீட்டி உலகறியச் செய்ய வேண்டும் என்று நான் சிந்தித்ததன் விளைவாகவே இந்தப் 'புயலின் நிறங்கள்' படைப்பு வெளிவந்துள்ளது என்று தமிழக ஓவியர் புகழேந்தி தெரிவித்தார்.**

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஓவியர் புகழேந்தி 1983 ஆம் ஆண்டு நான் ஓவியக் கல்லூரியின் மாணவனாக இருந்த காலம், தமிழீழத்தில் கொடிய யுத்தம் ஏவிவிடப்பட்ட காலம், திட்டமிட்ட முறையில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொன்றொழிக்கப்பட்டு, பல இலட்சக் கணக்கான தமிழீழ மக்கள் தமிழகம் நோக்கி அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

இந்தப் பாரிய இடப்பெயர்வின் விளைவாக தமிழக கல்லூரிகள், பாடசாலைகள் எல்லாவற்றினதும், மாணவர்களும் ஒன்றிணைந்து வீதியில் இறங்கி இலங்கை அரச பயங்கரவாதத்தின் செயல்களைக் கண்டித்து பகிஷ்கரிப்புப் போராட்டங் களில் ஈடுபட்டனர். திரும்பும் திசையெல்லாம் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியற்போர்கள் என்றவாறு தமிழக மக்கள் அனைவருமே ஒன்றிணைந்து போராட்டத்தில் குதித்தனர்.

அதுவரையில் இயற்கை ஆடு, கோழி என்று எல்லாம் ஓவியங்களை வரைந்து கொண்டிருந்த நான் ஒரு திருப்புமுனையாக மனிதர்களையும் அவர்கள் படும் துன்ப துயரங்களையும் ஓவியங்களாகத் தீட்டுவதற்கு முடிவெடுத்தேன். எனக்கு இருந்த ஒரேயொரு ஆயுதமான ஓவியம் என்னும் ஆயுதத்தைக் கொண்டு எந்த வகையில் தமிழர் உரிமைப் போராட்டத்தையும், தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களையும் உலகறியச் செய்வேன் என்று சிந்தித்ததன் விளைவாக ஈழத்தமிழர்கள் பற்றிய ஓவியங்களை வரைந்தேன்.

1998, 1999 காலப்பகுதிகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு இந்தப் படைப்புக்களைப் படைத்தேன்.

தமிழீழ மக்கள் சுதந்திரப் போராட்டம் என்றால் தமிழகத்தில் மிகுந்த ஆதரவையும் வரவேற்பையும் பெற்று - தம்மாலான உதவியை தமிழக மக்கள் செய்த ஒரு காலம் இருந்து வந்தது. அதன்பின் ஏற்பட்ட சில சம்பவங்களால் ஈழத்திற்கும் - தமிழகத்திற்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டது.

அன்று தொட்டு அது இன்று வரையும் தொடர்கின்றது. ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிக் கதைத்தாலே அவர் பயங்கரவாதி, புலி ஆதரவாளர், தீவிரவாதி என்றெல்லாம் முத்திரை குத்தப்பட்டு சிறையில் அடைபடும் அளவிற்கு நிலைமை விரிந்துள்ளது. இதன்விளைவாக ஈழத்தமிழர்கள் பிரச்சினைகள் குறித்த ஓவியங்களை மென்மேலும் வரைந்து அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா எனப் பல நாடுகளிலும் கண்காட்சிக்கு வைத்தேன். இதன் விளைவாக ஈழத்தமிழர்களின் நியாயமான பிரச்சினைகளை உலக மக்கள் மெல்ல மெல்ல உணர்ந்து கொண்டனர்.

உலகத்திலே புரட்சிகள் செய்த நாயகர்களையும் - அவர்களின் நியாயப்பாடுகளையும் கருத்து வெளிப்பாட்டு ஓவியங்கள் வடிவில் வடித்து வெளியிட்டிருந்தேன். ரஷ்யப் புரட்சிதொட்டு ஈழப் போராட்டம் வரை என்னுடைய ஓவியப்பணி தொடர்ந்திருக்கிறது.

புரட்சியவாதிகளில் லெனின் தொட்டு பிரபாகரன் வரை அவர்களது கொள்கைகளை நான் ஓவியங்களாக வரைந்து காட்சிப்படுத்தியிருக்கின்றேன். இந்தப் "புயலின் நிறங்கள்" என்ற தொகுப்பில் அடங்கியிருக்கும் ஓவியங்களை 2005 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நான் இங்கு வந்த போது தமிழீழத்தில் 15 இற்கும் மேற்பட்ட இடங்களில் காட்சிப்படுத்தியிருக்கின்றேன். அதன் விளைவாக எந்த நாடுகளிலும் பதியப்படாத எண்ணிக்கையில் இங்கு பல்வேறு கருத்துக்கள் பதியப்பட்டன.

எனது 23 ஆண்டுகால இந்த ஓவியங்கள் வரையும் பணியில் ஈழத்தமிழர் பிரச்சினைகளை 1984 - 1996 வரை நடைபெற்ற சம்பவங்களை ஒருதொகுதி ஓவியங்களாகவும், 1998 - 2000 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற சம்பவங்களை மற்றொரு தொகுதி ஓவியங்களாகவும் வரைந்துள்ளேன்.

என்னுடைய ஓவிய ஆயுதத்தைப் பயன்படுத்தி ஈழத்தமிழர் போராட்டத்தின் நியாயப்பாடுகளையும் - உண்மை நிலைகளையும் எதிர்வரும் காலங்களிலும் ஓவியங்களாக வரைவேன். அதன்மூலம் தமிழர் பிரச்சினைகளை உலகறியச் செய்வேன் என்றார். (37)

## நீரை அகற்றும் பணியில் மண்முனை வடக்கு பிரதேச செயலகம்

மட்டக்களப்பு திராய்மடுவில் தற்காலிக வீடுகளில் வதியும் மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள நீரை அகற்றுமாறு மக்கள் விடுத்த முறைப்பாட்டையடுத்து நடவடிக்கைகளை மண்முனை வடக்கு பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது. அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் சுனாமியால் பாதிப்புற்று இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் குடியிருப்புக்களில் நீர் தேங்கி நிற்பதாக தம்மிடம் மக்கள் முறையிட்டனர் எனப் பிரதேச செயலாளர் என்.சிறிசங்கர் தெரிவித்தார்.

இதனையடுத்தே யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகப் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## உதயபுரம் பாடசாலையின் நிர்மாணப் பணிக்கு தடங்கல்

உதயபுரம் பாடசாலையில் 50 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் பாடசாலை வளவிற்குள் அத்துமீறிய சர்வோதயக் கட்டடம், குடியிருப்புக்கள் இருப்பதனால் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற் பட்டுள்ளதுடன் கட்டட நிர்மாணப் பணி களுக்கு தடங்கல் ஏற்படுவதாகவும் பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

தரம்ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட இப்பாடசாலையானது சுனாமி அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் விஸ்தரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு கல்வி மற்றும் விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் வலுவூட்டுவது தொடர்பாக யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டம் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 200 இளைஞர் கழகங்களில் அங்கத்துவம் வகிக்கும் 720 இளைஞர், யுவதிகளுக்கு இரு நாட்கள் கொண்ட விசேட செயலமர்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான 42 செயலமர்வுகள் நடாத்தப்படுவதுடன் பிரதேச செயலக பிரிவுகள் தோறும் இளைஞர் மத்திய நிலையங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண இளைஞர் கழகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்க அதிகபணம் நலன்புரி முகாம்களில் வசிப்போர் பாடசாலை செல்ல முடியாதநிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு அதிக தொகை நன்கொடையாகக் கேட்கப்படுவதினால் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வசிக்கும் பிள்ளைகளில் பலர் பாடசாலை செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரபல்யம் அற்ற பாடசாலைகளில் கூட ஆகக் குறைந்த அன்பளிப்பு ஆயிரம் ரூபாவும் மற்றும் சில செயற்பாடுகளுக்கு குறிப்பிட்ட தொகையும் என அறவிட்டு வருகின்றார்கள்.

இத்தொகைகளை வழங்க முடியாத பெற்றோர்களின் பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத அவல நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

கல்வியமைச்சு பாடசாலைகளில் பிள்ளைகளின் அனுமதியின்போது பணம் அறவிடக்கூடாதென சுற்று நிருபங்களை கல்வித் திணைக்களம், பாடசாலைகள், பிரதேச செயலகங்கள் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்துகின்ற போதிலும் இதனை அமுல்படுத்துவதில் உரிய அலுவலர்கள் கவனம் எடுக்காமை இத்தகைய வறிய மக்களின் பிள்ளைகளின் கல்வியைப் பாதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதா[illegible]

இவ்வாண்டு [illegible]ாலையில் பிள்ளைகளின் அனுமதியின் போது பிள்ளைகளுக்கு சில நடவடிக்கைகளுக்கென பணம் பெற்ற போதிலும், அதனை வழங்காத நிலையில் அடுத்தாண்டுக்கும் பிள்ளைகளிடம் இத்தேவைகளைக் கூறி பணம் அறவிடும் முயற்சியில் ஈடுபடுவதைப் பெற்றோர்கள் கண்டிக்கின்றார்கள்.

மல்லாகத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலையொன்று இவ்வாண்டு பிள்ளைகளின் பரிசளிப்பு விழாவுக்கு 200 ரூபா கழுத்துப்பட்டிக்கு 80 ரூபா என அறவிட்ட போதிலும் பாடசாலை விடுமுறைக்கு ஒருவாரம் இருக்கையிலும் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலைமையில் மீண்டும் அடுத்தாண்டுக்கான பாடசாலைகளில் பிள்ளைகளின் அனுமதிக்கென பணம் அறவிடுவதுடன் கழுத்துப்பட்டி பரிசளிப்பு விழா என பணம் அறவிடப்படுவதையிட்டே பெற்றோர்கள் மத்தியில் விசனம் எழுந்துள்ளன.(41)

## கோண்டாவிலில் வீடுவீடாகச் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் பகுதியில் பொலிசாரும் படையினரும் வீடு வீடாகச் சென்று தீவிர சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை முதல் நடைபெற்ற இச்சோதனை நடவடிக்கையில் அப்பகுதி வீடுகள் அனைத்தும் சோதனையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியான கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடுகள் அதிகரித்துள்ள நிலையில் படையினரின் இத்தேடுதல் நடவடிக்கை குடாநாட்டில் பதற்ற நிலையை மேலும் அதிகரித்துள்ளது.

## மாவடிவேம்பில் கொள்ளையில் ஈடுபட்ட இராணுவ சீருடை அணிந்த ஆயுததாரிகள்

மாவடிவேம்பு வைத்தியசாலை வீதியில் இராணுவ சீருடை அணிந்த ஆயுததாரிகள் வீடுகளில் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். சுப்பிரமணியம் செல்வநாயகம் என்பவரது வீட்டில் கடந்த திங்கள் இரவு 10.30 மணியளவில் ஆயுதங்களுடன் வீட்டிற்குள் நுழைந்தவர்கள் 65 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும், 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி என்பவற்றையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை அதே இடத்தினைச் சேர்ந்த சுப்பிரமணியம் அன்னலெட்சுமி என்பவரது வீட்டிற்குத் திங்கள் இரவு 11.00 மணிக்கு சென்ற ஆயுததாரிகள் 75 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகை என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

## - மாகாணமட்ட பொதுப்பரீட்சை - 2005 -

## பரீட்சை வினாத்தாள் கிடைக்காததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய மாணவர்கள்

வடக்கு கிழக்கில் தரம் - 09 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப்பரீட்சை கடந்த செவ்வாயன்று ஆரம்பித்த போது பொத்துவில் கல்விக் கோட்ட பாடசாலைக்குரிய பரீட்சை வினாத்தாள்கள் கிடைக்காததால் மாணவர்கள் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர்.

வடகிழக்கில் 24 கல்வி வலயங்களில் வரலாறு, சமூகக்கல்வி, சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் நடைபெற்றன. இருப்பினும் பொத்துவில் கல்விக் கோட்டத்திலுள்ள எட்டுப் பாடசாலைகளைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பரீட்சை எழுத முடியாமல் காத்திருந்துள்ளனர்.

இதனையடுத்து பொத்துவில் கோட்டக்கல்வி அதிகாரி, அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது பொத்துவில் கோட்டப் பாடசாலைக்குரிய பரீட்சை வினாத்தாள்களை மாகாணக் கல்வியமைச்சு அனுப்பவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இதனால் மாணவர்கள் 12 மணி வரை காத்திருந்து விட்டு மிகவும் மனவேதனையுடன் வீடு திரும்பியுள்ளனர். மாணவர்களின் கல்வி திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்க தேசிய பொதுச் செயலாளர் எம்.அனாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா படை அதிகாரிகளின் பதவிஉயர்வு படும்பாடு!

சிறிலங்காவின் ஓர் இராணுவ அதிகாரியின் பதவிக்காலம் அன்றுடன் முடிவடைய இருந்தது. அவரது படைப்பிரிவின் தலைமை அலுவலகத்தில் அவருக்கான பிரிவுபசார வைபத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. பிரிவுபசார வைபவத்திற்காக அனைவரும் காத்திருந்தனர். அந் நிலையில் குறிப்பிட்ட இராணுவ அதிகாரியின் கைத்தொலை பேசியில் ஓர் அழைப்பு. இராணுவத் தலைமை அலுவலகத்தின் ஓர் அதிகாரியிடமிருந்து அந்த அழைப்பு வந்திருந்தது. அவருடைய பதவிக் காலம் ஒரு வருடம் நீடிக்கப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்தும் சேவையிலிக்குமாறும் கூறப்பட்டது.

சிறிலங்கா இராணுவ அதிகாரிகளின் பதவிக்காலம் தொடர்பில் 1994இற்கு பிந்திய நிலைமை இப்படித்தான் காணப்படுகின்றது.



சாந்த கொட்டேகொட

இப்பொழுது வேறொரு வகையிலான சூழ் நிலையில் சிக்கிக் கொண்டிருப்பவர் சிறிலங்காவின் தற்போதைய இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட. இவருடைய சேவைக் காலம் கடந்த ஐந்தாம் திகதியுடன் முடிவடைய இருந்தது. ஆனால் முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒக்டோபர் மாத இறுதியில் இராணுவ அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதெல்லையை 55இலிருந்து 58ஆக அதிகரித்து இவரது பதவிக்காலத்தை 2007 ஆம் ஆண்டு யூன் 31 ஆம் திகதி வரை நீடித்திருந்தார்.

ஆனால் புதிய சனாதிபதியாகப் பொறுப்பேற்றிருக்கும் மகிந்த ராஜபக்ஷ முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவை இரத்துச் செய்து எதிர்வரும் ஐந்தாம் திகதி (நாளை) இவரை ஓய்வு பெறச் செய்து மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவத்தளபதியாக்க முடிவு செய்திருக்கிறார்.

06.11.1949 இல் பிறந்த சாந்த கொட்டே கொட 2003 டிசெம்பரில் இராணுவத் தளபதியாகும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். ஆனால் இவருக்கு முன்னர் இராணுவத் தளபதியாக இருந்த லெப்.ஜெனரல் லயன்ஸ் பலகல்லவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டமை காரணமாக 2004 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதியே தளபதியாக நியமிக்கப்பட்டார். எனினும் அதேயாண்டு நவம்பர் மாதம் அவர் 55 வயதைப் பூர்த்தி செய்தமையால் அவர் ஓய்வு பெறும் நிலையை அடைந்தார். ஆனால் சனாதிபதி சந்திரிகா கடந்த ஐந்தாம் திகதி வரை (ஒரு வருட கால) பதவி நீடிப்பை வழங்கினார்.

இவ்வாறான நிலைதான் ஓய்வுபெறும் வயதெல்லை 55இலிருந்து 58 வரை நீடிக்கப்படாவிட்டால் பல மேஜர் ஜெனரல்கள் மிகக் குறுகிய காலத்தில் ஓய்வு பெற வேண்டிவரும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன ஒரு சிபார்சை முன் வைத்திருந்தார். இதற்கமையவே இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டது.

ஆனால் இவ்வாறு நீடிப்பு வழங்கப்படும் போது அது கனிஷ்ட தரத்திலுள்ள ஆயிரக்கணக்கான படை அதிகாரிகளைப் பெரிதும் பாதிக்கும் எனவும் அவர்கள் ஓய்வுபெறும் வயதெல்லையை அடைய முன்பே அவர்களுக்கு உரிய பதவி நிலை கிட்டாமல் ஓய்வு பெறவேண்டி ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் விடயம் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத் திற்காக இராணுவ முகாம்களுக்குச் சென்ற மகிந்த ராஜபக்ஷவுக்கு இராணுவ அதிகாரிகளால் எடுத்துக் கூறப்பட்டதாகவும், அதற்கமையவே இப் பொழுது சந்திரிகாவின் சேவை நீடிப்பு உத்தரவு இரத்துச் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், இப்பொழுது இன்னமும் சுமார் 19 மாதங்கள் சேவையிலிருக்க உத்தரவு வழங்கப்பட்ட லெப். ஜெனரல் சாந்தகொட்டேகொட நாளையே வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தற்போதைய இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல். சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாகவும் பதவியேற்கிறார்.

10 யூலை 2000 அன்று புலிகள் யாழ். குடாநாட்டில் ஓயாத அலைகள்

**அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் எவ் வகையிலும் அகற்றப்படக்கூடாது என்பது சரத் பொன்சேகாவின் கருத்தாகும். யாழ். அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் இவர் வெளியிட்ட அறிக்கைக்கு சனாதிபதி சந்திரிகாவினதும் இனவாத அமைப்புக்களினதும் பாராட்டு கிடைக்கப்பெற்றது.**

மூலம் அரியாலைப் பகுதியில் நிலை கொண்டிருந்தவேளை கொழும்பு இராணுவ விமான இறங்கு திடலில் ஒன்றன் பின் ஒன்றாக இரு எம்.ஐ 17 உலங்கு வானூர்திகள் வந்து இறங்கின. யாரோ மிக முக்கிய பிரமுகர் வருகிறார் என்றே இராணுவ உயரதிகாரிகள் எண்ணினர். ஆனால் தொடர்ந்து பல உலங்கு வானூர்திகள் வந்து இறங்கத் தொடங்கியபோது தான் யுத்த முனையொன்றில் காயமடைந்த அதிகாரிகள் உட்பட 95 படையினர் கொண்டு வந்து இறக்கப்படுவது தெரியவந்தது.

அத்துடன் அன்றைய தினம் காலை அரியாலையில் இராணுவத்தால் புலிகள் மீது வலிந்த தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டமையும் தெரியவந்தது.

இது தொடர்பாக அப்போதைய முப்படைகளினதும் தலைமைத் தளபதியான ஜெனரல் தளுவத்தைக்கோ இராணுவத் தளபதியான லெப்.ஜெனரல் சிறிலால் வீரசூரியவிற்கோ அல்லது வடபகுதி நடவடிக்கை கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்கோ எதுவும் தெரிந்திருக்கவில்லை.

இது யாருடைய வேலையென்றால் அப்போதைய யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர்ஜெனரல் சரத் பொன்சேகாவினுடையதாகவே இருந்தது. இதற்கு விளக்கம் கேட்டு மேஜர்ஜெனரல் ஜானகபெரேராவிடமிருந்து கடிதம் அனுப்பப்பட்டபோது சரத் பொன்சேகாவிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை என கூறப்பட்டது.

இந்த நடவடிக்கையில் ஒரு படை அதிகாரி உட்பட 19 பேர் பலியாகினர். ஐந்து பேர் காணாமல் போயினர். 95 படையினர் யுத்த முனையிலிருந்து வெளியேற்றப்படுமளவுக்கு காயமடைந்தனர்.

இராணுவ நடவடிக்கையில் ''இரகசியம் பேணல்'' என்பதற்கு உதாரணமாக இதனை ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை கிண்டலடித்திருந்தது.

அப்பொழுது மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா வடபகுதி நடவடிக்கை கட்டளைத் தளபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டார். சரத்பொன் சேகா யாழ். இலிருந்து அகற்றப்பட்டு வன்னிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.



சரத்பொன்சேகா

இந்த இருவரும் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டிருந்தவர்கள் ஆவர். அவ்வேளையில் பயிற்சிக்காக வெளி நாடுகளுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். பயிற்சி முடிந்து சிறிலங்கா திரும்பிய பின்னரும் கூட முக்கிய களமுனைகளான வன்னிக்கோ யாழ்ப்பாணத்திற்கோ அனுப்பி வைக்கப்படவில்லை.

பின்னர் ஓயாத அலைகள் 03 மூலம் விடுதலைப்புலிகளால் ஆனையிறவுப் படைத்தளம் கைப்பற்றப்பட்டு யாழ். நோக்கி புலிகள் முன்னேறத் தொடங்கிய பின்னரே சரத்பொன்சேகா யாழ். மாவட்டத்தளபதியாகவும், ஜானக பெரேரா வடபகுதி நடவடிக்கைத் தளபதியாகவும், நியமிக்கப்பட்டனர்.

பின்னர் மேற்கூறிய சம்பவத்துடன் யாழ்.குடாநாட்டிலிருந்து அகற்றப் பட்டனர்.

அப்போது இவர்கள் இருவரும் ஐ.தே.க. ஆதரவாளர்கள் என்பதனால் அரசியல் காரணங்களுக்காவே இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டதாகக் கூறப்பட்டது.

பின்னர் இவர் 2002 மே மாதம் யாழ் மாவட்ட தளபதியாக நியமிக் கப்பட்டார். அவ்வேளையில் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் வெளியிட்ட அறிக்கைக்கு சனாதிபதி சந்திரிகாவினதும் இனவாத அமைப் புகளினதும் பாராட்டு கிடைக்கப் பெற்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் எவ் வகையிலும் அகற்றப்படக்கூடாது என்பது அவரது கருத்தாகும் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே 50 ஆயிரம் வீடுகள் குடியிருப்பாளர்கள் இன்றி இருக்கையில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள வீடுகளில் குடியேற வேண்டுமெனக் கேட்பது ஏன்? என அப்போது அவர் கேள்வியெழுப்பியிருந்தார். இவ்விபரம் சரியா என்பது ஒருபுறம்.

அண்மையில் சனாதிபதித் தேர்தலில் வாக்குக் கேட்க வந்த மகிந்தராஜபக்ஷ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள வீடுகளுக்கு வாடகை கொடுக்கப்போவதாக கூறினார். அப்படியானால் இவர்கள் தமது வீடுகளை யாருக்காவது வாடகைக்குக் கொடுத்து விட்டு வந்து அகதி முகாம்களில் இருக்கத் தயாராக இருக்கின்றார்களா? என்பதற்கு இவர்கள் பதிலளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

சாந்தகொட்டேகொட இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற போது இராணுவத் தலைமை அதிகாரியாக பதவியேற்ற சரத்பொன்சேகா இப் பொழுது இராணுவத் தளபதியாக பதவியேற்க இருக்கிறார்.

சாந்தகொட்டே கொடவின் பதவிக் காலம் சுமார் 19 மாதங்கள் நீடிக்கப்பட்ட போது இவரும் ஜானக பெரேராவைப் போல இராணுவத் தளபதி பதவி

**வேலவன்**

கிட்டாமலே ஓய்வு பெறுவாரோ என்ற நிலை காணப்பட்டது. ஆனால் இப்போது அந்த நிலை மாறி விட்டது.

எவ்வாறாயினும், எதிர்வரும் எட்டாம் திகதி இவர் ஓய்வு பெறும் நிலையை அடைகிறார். அப்போது அவருக்கு சேவை நீடிப்புக் கிட்டுமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஏனெனில் சிறிலங்காவில் படை அதிகாரிகளின் பதவி விடயத்தில் எப்போது என்ன நடக்கும் என்பதை அறுதியிட்டுக் கூறி விட முடியாது.

# இனங்களிடையே ஒற்றுமையை உருவாக்கும் நடவடிக்கைகளுக்காக பாடுபடப்போகின்றேன்!

## — ஊடகவியலாளர் மத்தியில் சந்திரிகா உறுதிமொழி

(கொழும்பு)

**இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.**

ஊடகவியலாளர்கள் மத்தியில் கடந்த வியாழக்கிழமை ஆற்றிய விசேட உரையின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

வரலாற்றை நோக்கும் போது புரட்சிகரமாற்றங்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பம் தலைவர்களுக்கு ஏற்படுகின்ற போதிலும் அவை சில தீவிரவாதக் குழுக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் விடயமாக அமைந்திருப்பதில்லை.

சில தசாப்தங்களுக்கு முன்னர் எமது நாட்டில் அவ்வாறானதொரு சந்தர்ப்பம் உருவாகக் கூடிய நிலை ஏற்பட்டது. ஆனால் சில அரசாங்கங்கள் இந்தச் சந்தர்ப்பங்களில் பொறுப்புக்களை கைவிட்டு இரத்தம் தோய்ந்த பாதையை நோக்கிச் செல்ல முற்பட்டன.

எமது நாட்டில் தற்போது பெரும்பாலானோர் சகோதரத்துவத்துடனும் பொறுமையுடனும் மிதவாதப் போக்கையே பின்பற்றுகின்றனர். எனது அரசியல் கட்சியும் இந்த மிதவாதப் போக்குக் கொள்கையிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அநேகமான நாட்டைப் போலவே எமது நாட்டிலும் இரு தரப்பிலும் அடிப்படைவாதக் குழுக்கள் உள்ளன.

அடிப்படைவாதிகளின் குரோதம் மற்றும் பொறுமை அற்ற அரசியலுக்குட்படாதிருப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும்.

எனது சனாதிபதிப் பதவிக் காலத்தில் மிகுந்த சிரமப்பட்டு ஏற்படுத்திய நம்பிக்கை வளர்ச்சி அடைந்து நாளுக்குநாள் பலமடைந்து வருகின்றது.எமது இறுதி இலக்கில் வேகமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நம்பிக்கை மற்றும் அந்நியோன்னியத்தின் மூலம் நாம் ஏற்படுத்திய புதிய சூழ்நிலையை உறுதிசெய்துகொள்வதற்காக என்னால் செய்ய முடிந்த அனைத்து விடயங்களையும் நான் உண்மையாகவே நிறைவேற்றினேன்.

தற்போதைய போர்நிறுத்தம் பற்றி அனைவரிடையேயும் நிரந்தர நம்பிக்கையையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவது மிகவும் அவசியமானதாகும் என்றார் அவர்.

# க.பொ.த (சா/த) பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பல்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை நிலைய அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை நிலைய அனுமதிப் பத்திரங்களைப் பெறாத பரீட்சார்த்திகள் எதிர்வரும் ஆறாம் திகதிக்குப் பின்னர் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

இந்தப் பரீட்சை நிலைய அனுமதி அட்டைகளில் மாற்றங்கள் ஏதாவது செய்யப்பட வேண்டுமானால், உடனடியாக பரீட்சைத் திணைக்களத்துடன் பாடசாலை அதிபர்கள் தொடர்பு கொள்ள வேண்டப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணை யாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தப் பரீட்சை 22 ஆம் திகதிவரை நடைபெறும்.

இந்தப் பரீட்சையில் இந்த முறை ஐந்துஇலட்சத்திற்கும் அதிக மானவர்கள் தோற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# அனுசரணையாளர் நிலையிலிருந்து நோர்வே அகற்றப்படவேண்டும்

## -ஹெல உறுமய வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகுமாயின் அதில் நோர்வே அனுசரணைப் பணியில் இடம்பெறவே கூடாது என்று ஜாதிக ஹெல உறுமய சிறிலங்கா சனாதிபதியிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளில் மூன்றாம் தரப்பின் அனுசரணைப் பணி அவசியமாகும். எனினும் அந்தப் பணியை இனியும் நோர்வே முன்னெடுத்துச் செல்லக்கூடாது என்றும் ஹெல உறுமயக்கட்சி தெரிவித்துள்ளது. அனுசரணைப் பணிகளில் நோர்வே தவிர்ந்த வேறு ஸ்கண்டினேவிய நாடுகள் அல்லது சார்க் பிராந்திய நாடுகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் தாம் தடையாக இருக்கப்போவதில்லை என்று வலியுறுத்தியுள்ள ஹெல உறுமய, சார்க் பிராந்திய நாடுகளே இந்த அனுசரணைப் பணிகளுக்கு பொருத்தமான நாடுகளாக அமையும் என்றும் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் இந்தியாவை அனுசரணைப் பணிகளில் இணைத்துக் கொள்வது சாத்தியமற்றது என்று கருதுவதாகவும் ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது.

## மூன்று அரச வங்கிகள் உருவாக்கத்திட்டம்

(கொழும்பு)

தற்பொழுது இலங்கையில் இருக்கும் ஐந்து அரச வங்கிகளுக்கு மேலதிகமாக மூன்று வங்கிகளை நிறுவுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளதென திறைசேரியின் செயலாளர் பேராசிரியர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மகிந்த சிந்தனைகளை வெற்றியடையச் செய்வதற்காகவே இந்த மூன்று வங்கிகளையும் நிறுவ அரசு தீர்மானம் எடுத்துள்ளது. இவை யாவும் இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வரவு-செலவுத்திட்ட யோசனைகளில் ஜே.வி.பி யின் திட்டங்களும் உள்ளடங்க வேண்டும்

## — சனாதிபதியைச் சந்தித்து ஜே.வி.பி வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் எட்டாம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள வரவு-செலவுத் திட்ட யோசனையில் ஜே.வி.பி.யின் திட்டங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக சனாதிபதியும், நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவையும், நிதி அமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவையும் எதிர்வரும் நாட்களில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கும் விவசாயிகளுக்கும் நலன் தரும் விதத்தில் பலசலுகைகள் அடங்கியதாக ஜே.வி.பி. தயாரித்திருக்கும் யோசனைகள் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மகிந்தவின் சிந்தனையின்அடிப்படையில்வரவு- செலவுத்திட்டம் அமைவது வரவேற்கத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அஞ்சல் அலுவலக காணி வெளியாரால் ஆக்கிரமிப்பு

அனுராதபுரம் அஞ்சல் அலுவலகத்திற்கு சொந்தமான காணியில் வெளியார் சிலர் அத்துமீறி குடியேறியுள்ளதாக சிறிலங்கா தபால் ஊழியர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது. .அஞ்சல் அலுவலகத்திற்கு சொந்தமான காணியில் அவர்கள் சட்டவிரோதமான 12. கட்டடங்களை நிர்மாணித்துள்ளதாகவும் சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் அஞ்சல் அலுவலகத்தின் கடமைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அஞ்சல் மா அதிபருக்கும் அறிவித்துள்ளதாக சிறிலங்கா அஞ்சல் ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## பால்மா விலையை அதிகரிக்க முயற்சி!

நெஸ்பிறே உள்ளிட்ட ஏனைய பால் மாக்களின் விலைகளை அதிகரிப்பதற்கு நெஸ்லே நிறுவனம் நுகர்வோர் சபையிடம் கேட்டுள்ளது. நெஸ்லே சபையின் இந்த வேண்டுகோளை பரிசீலனை செய்யப் போவதாகவும் ஆனால் நிறுவனம் தான் நினைத்தபடி பால்மா விலைகளை அதிகரிக்குமானால் அந்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வாணிப அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டுப் பறவை இறப்பு பறவைக்காய்ச்சல் காரணமா?

## -பரிசோதனை நடவடிக்கைகள் தீவிரம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை உப்பளப் பகுதியில் சைபீரியாவில் இருந்து வந்த பறவை இனம் ஒன்று உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறந்து போன இந்தப் பறவை பறவைக்காய்ச்சல் நோய் காரணமாக மரணமானதா என்பதைக் கண்டறியும் நோக்கில் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த பறவையின் உடற்பாகங்கள் கண்டி பேராதனை பல்கலைக்கழக ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப்பரிசோதனை முடிவுகளின் பின்னர் சரியான முடிவிற்கு வர முடியும் என வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சுனாமி கடல் சீற்றம் காரணமாக உப்பளங்களுக்குள் சேர்ந்த கழிவுகள், இந்தப் பறவையின் மரணத்திற்கான காரணமாக இருக்கலாம் என வன ஜீவராசிகள் திணைக்களத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# 6 மாத காலத்தில் 1இலட்சம் பேருக்கு சுயதொழில் வாய்ப்பு

## -அமைச்சர் எஸ்.பி.நாவின்ன

(கொழும்பு)

எதிர்வரும் ஆறு மாதகாலப் பகுதியில் சுமார் [illegible] லட்சம் பேருக்கு சுய தொழில் வா[illegible]பை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்[illegible] ஒன்றை மேற்கொள்ளவுள்ளதா[illegible] கிராமிய கைத் தொழில், மற்றும் சுய [illegible]தொழில் ஊக்குவிப்பு அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்தார்.

அனைத்து தேர்[illegible] தொகுதியிலும், கைத்தொழில் கி[illegible] உருவாக்கப்படும்.

இதன் மூலம் [illegible] லட்சம் பேருக்கு சுயதொழில் வ[illegible] ஏற் படுத்தும் செயற்றிட்டம் [illegible]படும்

இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் இன்னும் இரண்டு வாரங்களில் குருநாகல் மாவட்டத்தின் வாரியப் பொலவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தென்மாகாணத்தில் கைத் தொழில் கிராமத்தை உருவாக்குவதற்கு முல்கிரிகல்ல பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராமிய கைத்தொழில் கிராமங்களில் சிறுகைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுகூறினார். (32)

# பிரித்தானியாவில் ரூ.200 கோடி செலவில் சந்திரிகாவுக்கு ஆடம்பர மாளிகை

## -குடும்ப உறவினர் பெயரில் 300 ஆயிரம் மில்.பவுண்ஸ் வைப்பு

பிரித்தானிய இளவரசியின் இரண் டாவது மகனான இளவரசரின் வீட்டை சந்திரிகா கொள்வனவு செய்துள்ளார். இளவரசர் அன்றோவிற்குச் சொந்தமான சன்னின்கில் பாக் வீட்டையே சந்திரிகா கொள்வனவு செய்துள்ளார். சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக



சந்திரிகா வாங்கிய மாளிகை

விற்கப்படாமல் இருந்த இந்த வீட்டை பத்து மில்லியன் பிரித்தானியப் பவுண்டுகளுக்கு மேல் கொடுத்து சந்திரிகா கொள்வனவு செய்துள்ளார். இதன் இலங்கைப் பெறுமதி 2000 மில்லியன் ரூபாய்கள் ஆகும்.

இதே நேரம் பிரான்ஸ் நாட்டில் இரண்டு ஆடம்பர தொடர்மாடி வீடுகளை சந்திரிகா 800 மில்லியன் ரூபாய்களுக்கு கடந்த மாதம் கொள் வனவு செய்துள்ளதாக அறியமுடி கிறது. இந்தப் பணத்தினை சந்திரிகா தனது 11 வருட ஆட்சிக் காலத்தில் உலக நாடுகளால் வடக்குக் கிழக் கிற்கு நிவாரணமாகக் கொடுத்த பணத்திலிருந்து மோசடியான முறையில் சம்பாதித்ததாக கூறப்படுகிறது. இந்த விடயத்தை பிரத்தானியப் பத்திரிகையொன்று அம்பலப்படுத்தியுள்ளதால் தனது குடும்பத்தவருக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் இந்தத் தகவல் தவறானது எனவும் சந்திரிகா மறுத்துள்ளார். இதேநேரம் சந்திரிகா தனது குடும்ப உறவினரின் பெயரில் சுமார் 300ஆயிரம் மில்லியன் பவுண்ஸ் வைப்பிலிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின்போது வடக்கு-கிழக்கில் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல் நடைபெறவில்லை என்றும் அந்தப் பிரதேசங்களில் மீண்டும் தேர்தலை நடத்த உத்தரவிடுமாறு கோரியும் ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனு மீது 2006 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம்திகதி விசாரணை நடைபெறும் என்று சிறிலாங்காவின் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.வீ.ஆனந்தசங்கரி உட்பட மூவரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உட்பட்ட சிலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

# பொலிசாரால் தடுத்துநிறுத்தப்பட்ட வாகனத்திலிருந்தோர் தப்பியோட்டம்

## -ஹாலி எலவில் சம்பவம்

பதுளை ஹாலி எல பகுதியில் வாகனமொன்றின் மீது பொலிசார் நேற்று முன்தினம் அதிகாலை துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். பொலிசாரின் சமிக்ஞையை மீறி வாகனத்தை ஓட்டிச் சென்றதன் காரணமாகவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பதுளை பொலிசார் தெரிவித்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் அதில் பயணம் செய்த குழுவினர் வாகனத்தைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிசார் மேலும் கூறினர். இந்தச்சம்பவத்திற்குப் பின்னர் ஹாலி எல பிரதேசத்திலுள்ள அரசியல்வாதி ஒருவரின் வீட்டின் மீது இனந்தெரியாத குழுவினர் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்தின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லையென பதுளைப்பொலிசார் தெரிவித்தனர். இந்த சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னர் அரசியலுடன் தொடர்புடைய இரு குழுக்களுக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதாகவும் பின்னர் வாகனமொன்று கடத்திச் செல்லப்பட்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர்.


# அறிவித்தல்

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் கற்கைநெறி

ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனியின் அனுசரணையுடன் கிளி. தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் கற்கைநெறிக்கு நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளோர் விபரம்:

1. கு.கதிர்ச்செல்வி, கனகபுரம்,
2. வே. சத்தியவாணி , அறிவியல்நகர்,
3. ஈ. புஸ்பலதா, கோணாவில்,
4. சி. வினோதினி, செல்வாநகர்,
5. இ. பத்மசிறி, கோணாவில்,
6. ஆ. மரியலோஜினி, கோணாவில்,
7. த. மதியழகன், உருத்திரபுரம்,
8. அ. ஆதவன் , உருத்திரபுரம்,
9. லோ. ஜீவகரன், கல்மடுநகர்,
10. த. தர்மராசா, பரவிப்பாஞ்சான்,
11. சி. அகிலன், செல்வாநகர்,
12. ஐ. பகிதரன், பெரியபளை,
13. இ. பிரதீபன், இராமநாதபுரம்,
14. ப. பிரதீபன், உடையார்கட்டு வடக்கு,
15. த. பிரதீபன், பூநகரி,
16. கு. கவிச்செல்வி, பரந்தன்,
17. சி. தவராஜா, உருத்திரபுரம்,
18. த. மனோகாந், மானிப்பாய் வடக்கு,
19. இ. குமரன், தருமபுரம்,
20. சி. மணிமாறன், வள்ளிபுனம்,
21. இ. ஜெயராசா, ஸ்கந்தபுரம்,
22. சி. ரமேஸ், அம்பிகா மருத்துவமனை அருகாமை,
23. க. குகப்பிரியா, பூநகரி,
24. அ. சுஜிதா, இராமநாதபுரம்,
25. சாந்தமெறில்டா, கோணாவில்,
26 ஆ. யாழினி, தருமபுரம்,
27. தி. துகிலாதேவி, தருமபுரம்
28. பா. சுபாஜினி, முல்லைத்தீவு,
29. இ. சத்தியரூபன்

மேற்குறிப்பிட்ட விபரங்களை உடையோரிற்கான கற்கைநெறி எதிர்வரும் 05.12.2005 (திங்கட்கிழமை) கிளி. தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் காலை 09.00 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆளணி மேலாளர்,
ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி,
கிளிநொச்சி.

(சி.13480)


# அரச சேவை ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிந்தது

(கொழும்பு)

அரசசேவை ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்தது. எனினும் அந்த ஆணைக்குழுவின் பணிகளை நீடிக்கும் செயற்பாடுகள் எவையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. அரசியலமைப்பு சட்டத்தின் 17 ஆவது திருத்தத்திற்கு அமைய அமைக்கப்பட்ட இந்த சுயாதீன ஆணைக்குழு மூன்று வருட பதவிக்காலத்தைக்கொண்டதாகும்.இந்த ஆணைக்குழுவுக்கான புதிய உறுப்பினர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. இந்தப் பணியானது சனாதிபதியினால் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற போதும் அது நிறைவேற்றப்படவில்லை.

இதேவேளை கடந்த 24 ஆம்திகதியுடன் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிக்காலமும் முடிவடைந்தது.

எனினும் அதற்கான புதிய உறுப்பினர்களும் சனாதிபதியினால் நியமிக்கப்படாமையால் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

அரசியலமைப்பு சபையின் செயற்பாடுகளில் திறன் குன்றியுள்ளமையே இதற்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மின் பாவனையில் மோசடி தடுக்க புதிய முயற்சி

(கொழும்பு)

மின்சார விநியோகத்தைப் பெறும், நுகர்வோர்களினால் மேற்கொள்ளப்படும். மோசடி நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் இலங்கை மின்சார சபை புதிய விசாரணை அமைப்பொன்றை அமைத்துள்ளது.

இந்த அமைப்பின் மூலம் வீட்டு மின்சாரப் பாவனை தொழிற்சாலைகள், மற்றும் வர்த்தக நோக்கிலான மின்பாவனைக்காக மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் புதிய அமைப்பின் மூலம் மின்சாரம் சபைக்கு வரவேண்டிய கொடுப்பனவுகளை நுகர்வோரிடமிருந்து துரிதமாக அறவிட முடியும் என மின்சக்தி எரிபொருள் அமைச்சு தெரிவித்துள்ளது.நாடளாவிய ரீதியாக நாளாந்தம் மின்சார சபை எதிர்நோக்கும் நஷ்டமான 4 கோடி 50 லட்சம் ரூபா இந்த அமைப்பின் மூலம் மீளப்பெற முடியும் என அமைச்சு தெரிவித்துள்ள அதேவேளை, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் மின்சார சபை முக்கிய பங்கு வகிக்க முடியும் என அமைச்சினால் எதிர்பார்க்கப்படுகிறது.


# வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம்

**உங்கள் கிராமம் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருந்த போதிலும் உங்கள் கிராமம் தெரிவு செய்யப்படவில்லையா?**

உலக வங்கியின் அனுசரணையுடன் மாகாண திட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் இறுதியாகத் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் பெயர்கள் பிரதேச செயலர்களால் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். ஒரு கிராமம் தகுதியாக இருந்தும் விடுபட்டு இருப்பின் கீழ்காணும் நடைமுறையில் நிவாரணம் கோர இடமுண்டு.

*1. பிரதேச செயலர் மட்டம்:-*

*பிரதேச செயலர்களால் கிராம முன்னுரிமைப்பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இரண்டு வார காலத்தினுள் முன்வைக்கப்படும் ஆட்சேபனைகள் செய்யலாம்.*

*2. மாவட்ட மட்டம்:-*

*பிரதேச மட்ட பதிலில் திருப்தி அடையாதவர்கள் அதனையும் குறிப்பிட்டு அரசாங்க அதிபருக்கு முறையிடலாம்.*

*3. மாகாண மட்டம்:-*

*அரசாங்க அதிபரது தீர்மானத்தில் திருப்தியடையாதவர்கள் கிராம புனர்வாழ்வுக்குழு, வ. கி. மாகாண பிரதம செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம். பிரதம செயலாளரின் முடிவே இறுதி முடிவாகும்.*


**கிராமங்களின் தெரிவு நிறைவுற்று மாகாண ஒருங்கிணைப்புக் குழுவினதும் உலக வங்கியினதும் அங்கீகாரத்தைப் பெற்ற பின் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது. குறைகேள் தீர்வு நடைமுறைக்குப்பின் தெரிவுசெய்யப்படும் கிராமங்கள் அடுத்த கட்ட திட்ட அமுலாக்கலில் உட்படுத்தப்படும்.**

(சீ-13462)


செழுமை குன்றா உன்
17 ஆம் ஆண்டின் நினைவோடு

# வீரவணக்கம்

தாயின் மடியில 22 - 05 - 1944



தாயக மண்ணில் 04 - 12 - 1988

நாட்டுப்பற்றாளர்

## ஆசிரியர் நா. கருணானந்தசிவம்

(காங்கேசன்துறை)

விசும்பின் திலகமாய் விடுதலைச் சுடராய் -நீ
என்றுமே கனல்கின்றாய் தமிழோடு நிதமும்
கருமைசூழ் இருளது கவர்ந்தது எம்மண்ணில்
அனல் கொண்ட உன்குரல் கிழித்தது இருளை
உருக்கொண்டோம் உணர்ச்சிகொண்டோம் சுதந்திரம் கேட்டு
இறுமைக்கு உரமேற்ற உயிர் ஊதி உடல் சாய்ந்தாய்
மண் உதிரத்தால் நீராட்டி இலட்சியவான் மூச்சானாய்
தணியாத தாகம் இன்று தரணியேற்ற உன்நினைவோடு தொடர்கின்றோம்.
"இலட்சியவேங்கை இறப்பதுமில்லை
விடுதலைப்புலிகள் வீழ்வது மில்லை"

குடும்பத்தினர்.

(6959)

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாணசபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம்

## (நீகோட்)

## நிதி- ஆசிய அபிவிருத்தி வங்கி

## ஆஅவ கடன் இல-2084- சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் – இல. ௬

01 வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம் (NECORD-EXT) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (''ஆ.அ.வ'') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னால் தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் necord திட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் [ரூபா] |
|---|---|---|---|
| NEP/NECORD-EXI/I/01&02 | திருகோணமலை,வரோதயநகரில் இரண்டு,மூன்று மாடிஅலுவலர் விடுதிஅமைத்தல் | M4 கட்டடங்கள் | 307.000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

I நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தர மொன்றில் ஒப்பந்தக் காரராகப் பதிவு செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச)உறுப்பினராக விளங்கவேண்டும்.

III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன்,மேற்கொள்ளப் பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV "ICTAD"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. அதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர் நீகோட்திட்டம் 55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி 026-2227434. /பக்ஸ் :-026-2227401 இணையத்தள முகவரி www.necord.org ஈமெயில் :necord @sltnet.lk

06. கேள்வி ஆவணங்களை 25.11.2005 இல் இருந்து 12.12.2005 வரை காலை 9.30 இருந்து மாலை 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 2000 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08.. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்" 55, கந்தசுவாமி கோவில் வீதி, திரு கோணமலை என்ற விலாசமிடப்பட்டு 19.12.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 12.12.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்பிற்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங் களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக மாட்டார்.

**து.லங்காநேசன்,**
**தலைவர்,கேள்விச்சபை,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்,**
**55,கந்தசுவாமி கோவில் வீதி,**
**திருகோணமலை.**

(சி-13481)

# முதலாவது ஒருநாள் போட்டி அவுஸ்.இற்கு 147 ஓட்ட வெற்றி



நியூசிலாந்துக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையில் நேற்று ஒக்லண்டில் நடைபெற்ற முதலாவது ஒருநாள்போட்டியில் அவுஸ்திரேலியா 147 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் விட்டோரி அவுஸ்திரேலிய அணியை துடுப்பாட அழைத்தார்.

அவ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றி இலக்கு நோக்கி ஆடிய நியூசிலாந்து27.4 ஓவரில் 105 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 1-0என்ற நிலையில் அவுஸ்திரேலியா முன்னிலை வகிக்கின்றது.

காயம் காரணமாக பிளமிங் பங்கேற்கவில்லை இதனால் இரண்டு போட்டிகளுக்கு விட்டோரி தலைவராக இருப்பார்.

# டெஸ்ட் தொடரை கைப்பற்றினால் இந்தியாவுக்கு இரண்டாம் இடம்



இலங்கை டெஸ்ட் தொடரை இந்தியா வென்றால் தரவரிசை பட்டியலில் இந்திய அணி இரண்டாவது இடத்திற்கு முன்னேறும் வாய்ப்பு உள்ளது.

சர்வதேச கிரிக்கெட்சபை (ஐ.சி.சி) டெஸ்ட் தரபட்டியலில் இந்திய அணி 112 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. இதிலிருந்து ஒருபடி முன்னதான இரண்டாவது இடத்தைப் பிடிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. இலங்கை டெஸ்ட் தொடரை இந்தியா 2-0 என்ற புள்ளி கணக்கில் வெல்லும் பட்சத்தில் இங்கிலாந்தை முந்தி இரண்டாவது இடத்தைப் பிடித்து விடலாம். தற்போது இரண்டாவது இடத்தில் உள்ள இங்கிலாந்து அணி 119 புள்ளிகள் பெற்றுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராக லாகூர் டெஸ்ட்டில் இந்த அணி தோல்வி அடைந்ததால் இந்தியா குறைந்த பட்சம் இலங்கைத் தொடரை வென்றால் (1-0 அல்லது 2-1 என்ற கணக்கில்) போதும் இரண்டாவது இடத்தைப் பிடித்து விடலாம். தரவரிசையில் அணிகள் பெற்றுள்ள புள்ளிகள்:-அவுஸ்திரேலியா 128, இங்கிலாந்து 119, இந்தியா 112,தென்ஆபிரிக்கா 100, நியூசிலாந்து 100,இலங்கை 99, பாகிஸ்தான் 95, மேற்கிந்தியத்தீவு 73, சிம்பாப்வே 27, பங்களாதேஷ் 5.

# மண்கௌவினர் ஆஷஸ் ஜாம்பவான்கள் லாகூரில் பாகிஸ்தானுக்கு அபார வெற்றி



லாகூர் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி ஒரு இனிங்ஸ் மற்றும் நூறு ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் முகமட்யுகானா, கம்ரன் அக்மல், இன்சமாம் கை கொடுக்க பந்துவீச்சில் வேகப்புயல் அக்தர் சுழல் மன்னன் கனேரியா பிரகாசிக்க இங்கிலாந்தின் தோல்வியைத் தவிர்க்கும் முயற்சி தகர்ந்து போனது.

ஏற்கனவே 1-0 என்ற நிலையில் தொடரில் முன்னிலை வகித்த பாகிஸ்தான் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டியை வென்றதன் மூலம் 2-0 என்ற நிலையில் தொடரைக் கைப்பற்றியது.

போட்டியின் இறுதி நாளான நேற்று பாகிஸ்தானைவிட 348 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் ஆட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து 30 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்து இங்கிலாந்து ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்த போதும் கொலிங்வூட் இயன்பெல்லின் துடுப்பாட்டம் நம்பிக்கை அளிக்கும் வகையில் அமைந்ததுடன் விக்கெட்சரிவையும் தடுத்து நிறுத்தியது. இதனால் இங்கிலாந்து இப் போட்டியை வெற்றி தோல்வியற்ற முடிவுக்கு நகர்த்திச் செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. இங்கிலாந்தும் அதனையே எதிர்பார்த்தது.

இது மதிய உணவு இடைவேளைக்கு பின் தலைகீழாக மாறியதுடன் இங்கிலாந்து அதிர்ச்சி சரிவொன்றை எதிர்நோக்கியதுடன் படுதோல்வியையும் சந்தித்தது.

அதாவது 205 ஓட்டங்களுக்கு மூன்றாவது விக்கெட் வீழ்த்தப்பட்ட அதேவேளை 248 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களும் வீழ்ந்தது. துடுப்பாட்டத்தில் இயன்பெல் 92, கொலிங்வூட் 80, உடல் 25 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பிளிண்டொப், புலண்கொட், ஹாா்மிசன் ஓட்டமெதுவும் பெறாமலும், பீற்ர்சன் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். அக்தர் ஐந்து விக்கெட்டுக்களையும் கனேரியா நான்குவிக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக முகமட் யுகானா தெரிவானார். இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 288 ஓட்டம், பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 636 ஓட்டம், இங்கிலாந்து இரண்டாவது இனிங்ஸ் 248 ஓட்டங்கள்.

# அதிகாரிகள் தலைமறைவு வதந்தியே உண்மை இல்லை

தானும் சபைத்தலைவர் பீற்றர் சிங்கோகாவும் தலைமறைவாகியிருப்பதாக வெளிவந்த வதந்தியில் எவ்வித உண்மையும் கிடையாது என சிம்பாப்வே கிரிக்கெட்சபையின் பணிப்பாளர் ஒஷைஸ் பியுட் தெரிவித்துள்ளார்.


இவர்களிருவரும் பொலிசாரின் தேடுதலில் இருந்து தப்பிவிட்டதாக அணித் தலைவர் ட்டண்டாதைபு அண்மையில் தெரிவித்த இந்தத்தகவலையே அவர் நிராகரித்துள்ளார். பியுட் தெரிவிக்கும்போது அன்றையதினம் வீட்டில் நித்திரை கொண்டதாகவும், அதிகாலை நான்கு மணிக்கு எழும்பியதாகவும் சுமார் எட்டுமணியளவில் பணிக்கு சென்றதாகவும் கூறினார்.

அத்துடன் தன்னையோ சக அதிகாரியையோ எந்த ஒரு பொலிசாரும் தேடிவரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்களிருவரும் பதவி விலகவேண்டும் என தைபு முன்னர் தெரிவித்திருந்தார். அத்துடன் இனவாத ரீதியாக இவர்கள் செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தினார். இந்த விவகாரம் தீவிரமடைந்ததால் தைபு பங்களாதேஷ் கவுண்டி அணிக்காக விளையாடச் செல்வதாகவும் தெரிவித்தார்.

எனினும் மேற்படி அதிகாரிகள் பதவி விலகினால் மீண்டும் தனது அணியில் இணைந்து விளையாடப்போவதாகவும் தெரிவித்திருந்தார்.

# உலகக்கிண்ண கால்பந்து போட்டி; தென்னாபிரிக்க பயிற்சியாளர் விலகத்தீர்மானம்



அடுத்த வருடம் ஜேர்மனியில் நடைபெறும் உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட போட்டிகளுக்கு தென்னாபிரிக்கா தகுதி பெறாததையடுத்து அவ்வணியின் பயிற்றுநர் ஸ்டுவர்ட் பாச்சர் அப்பதவியிலிருந்து விலகத் தீர்மானித்தள்ளார்.

இது தொடர்பாக அவர் விளக்கமளிக்கையில்; போட்டிகள் தோல்வியில் முடிவதால் அந்த ஏமாற்றத்துடன் காலங்கழிக்க முடியாது என்றும் அது ரசிகர்களை தவறான எண்ணத்துக்கு இட்டுச் செல்லும் என்றும் தெரிவித்துள்ளார்.

உண்மையில் தனது அணி நல்ல அணியென்ற போதும் குறிப்பிட்ட சில இடங்களில் தவறுகள் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் ரசிகர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதை தான் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

தற்போது பதவி விலகினாலும் 2010 ஆம் ஆண்டு தனது நாட்டில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு அணியைத் தெரிவு செய்வது தனது முக்கிய பணி என்று கூறியுள்ளார்.




# கங்குலி மீது நல்ல மதிப்பு வைத்துள்ளார் ஸ்ரீவ்வோ

–சமாளிக்கிறார் மார்க்வோ



கங்குலி மீது ஸ்ரீவோ நல்ல மதிப்பு வைத்திருப்பதாக கூறி சமாளிக்கிறார் சகோதரர் மார்க்வோ. அவுஸ்திரேலிய முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோ தனது சுயசரிதையில் கங்குலியை கடுமையாக சாடியுள்ளார். இவர் ஆடுகளம் அமைப்பதில் தலையிடுவது சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கு சமம் என குற்றஞ் சாட்டியுள்ளார். இது குறித்து நேற்று முன்தினம்மும்பை வந்த இவரது சகோதரர் (இரட்டையர்) மார்க்வோவிடம் நிருபர்கள் கேட்டனர். அப்போது மார்க் கூறியதாவது;

ஸ்டீவோ சுயசரிதையை இன்னும்படிக்கவில்லை. கங்குலியின் சில செயல்கள் ஸ்ரீவ்வோ மனதை பாதித்திருக்கலாம் ஆனால் ஒருவருக்கு ஒருவர் நல்ல மதிப்பு வைத்துள்ளனர்.


அந்நிய மண்ணில் இந்தியா சிறப்பாக செயற்படாததற்கு ஆடுகளமும் ஒரு காரணம். நாடு முழுவதும் துடுப்பாட்டக்காரர்களுக்கு ஏற்ற களங்களே காணப்படுகின்றன.ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமான ஆடுகளங்கள் அமைக்கப்பட்டால் இந்திய துடுப்பாட்டவீரர்கள் வெளிநாட்டில் பிரகாசிக்க ஏதுவாக இருக்கும்.

ராகுல் ராவிட் தலைமையில் கங்குலி விளையாடுவதில் தவறு இல்லை. கங்குலியிடம் நிறைய திறமை இருக்கிறது. இந்திய அணியில் மீண்டும் இடம் பெற்றது குறித்து மகிழ்ச்சி அடையவேண்டும். ஓட்டங்களை குவித்து ராவிட்டுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். பயிற்சியாளர் கிரேக்சப்பல், ரசிகர்களை நோக்கி சைகை செய்த விவகாரத்தை பெரிதாக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்தார்.



இந்திய- இலங்கை அணிகளுக் கிடையிலான சென்னை டெஸ்ட் போட்டி இரண்டாவது நாளாக நேற்றும் முற்றாக கைவிடப்பட்ட நிலையில் மைதானத்தின் நடுவில் ஏமாற்றத்துடன் உரையாடும் இந்திய வீரர் சச்சின், கங்குலி மற்றும் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன்.

## சிந்தனைக்கு



இந்த உலகில் அநீதியும்- அடிமைத் தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத் தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 04.12.2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## மக்கள் கிளர்ச்சியின் முன்னால்.......!

யாழ்.குடாநாட்டில் அண்மையில் இடம்பெறும் சம்பவங்கள் சில சமிக்கைகளை சிறிலங்கா அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்தக் கூடியன.ஆனால் அதனைப் புரிந்து கொள்ளாத தும் புரிந்து கொள்ளாது அதன் விளைவுகளை அனுபவிப்பதும் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பினரதும் சிறிலங்கா அரசினையும் பொறுத்த விடயமாகும்.

நீர்வேலிப்பகுதியில் இரண்டு இளைஞர்கள் சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அடுத்தநாள் யாழ் குடா நாடு முற்றிலுமாக ஸ்தம்பிதமடைந்தது. அதாவது பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதேசமயம் சில இடங்களில் சிறிலங்கா ஆயுதப்படையினரை இளைஞர்கள் வழிமறித்துள்ளதோடு, சர்வதேச மாணவர் பேரவை அலுவல கத்தை முற்றுகையிட இராணுத்தினர் முயன்ற போது மாணவர் களும், இளைஞர்களும் சேர்ந்து அவர்களை விரட்டியடித்துள்ளனர்.

தமிழ் மக்கள் சிறிலங்கா அரசில் இருந்து விலகிச் செல்கின்றனர் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் இருப்பினும், கடந்த சனாதிபதித் தேர்தலினை அவர்கள் முற்றாகவே புறக்கணித்தமை தனியாகத் தேர்தலில் இருந்து விலகியிருந்தமையாகக் கொள்ளுதல் தவறான தாகும். சிறிலங்கா அரசில் இருந்து தாம் விலகியிருக்க விரும்புவதன் வெளிப்பாடாகவுமே கொள்ளத்தக்கதாகும்.

இந்நிலையில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடும் அடக்குமுறைகள் தமிழ் மக்களை மேலும், மேலும் சிறிலங்கா அரசிலிருந்து விலகிச்செல்வதற்குத் தூண்டு வதாகவும் சிறிலங்கா அரசு மீது தமது வெறுப்பை வெளிப்படுத்து வதற்கானதாகவுமே அமையத்தக்கது.

இப்பொழுது தமிழ் மக்கள் சிறிலங்கா அரசிற்கும் ஆயுதப்படைக்கும் தமது எதிர்ப்பை துணிவாக வெளிப்படுத்தும் நிலைக்கு வந்துள்ளதை அண்மைய நிகழ்வுகள் தெளிவாகவே எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக, சிறிலங்கா ஆயுதப்படைகளின் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் வீதியில்இறங்கத் தொடங்கி யுள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும்.

எடுத்துக்காட்டாக நீர்வேலிப்படுகொலைச் சம்பவத்தை அடுத்து மக்களின் நடவடிக்கையைச் சுட்டிக்காட்ட முடியும். அதாவது இரவு நேரத்தில் விடுக்கப்பட்ட அறிவிப்பு ஒன்றுடன் யாழ் குடா நாடு ஸ்தம்பிதநிலை அடைந்தது. அரச மற்றும் தனியார் நடவடிக்கைகள் யாவுமே முடங்கிப்போயின.

குறுகிய கால அறிவிப்பு ஒன்றில் தமிழ் மக்கள் இத்தகைய நடவடிக்கைகளுக்குத் தயாராக இருப்பதானது அப்பட்டமான அரசின் மீதான அதிருப்தியின் வெளிப்பாடே ஆகும். இதேசமயம் தமது சாத்வீக ரீதியிலான நடவடிக்கைகளுடன் வீதியில் இறங்கி இராணுவத்தை எதிர்க்கும் துணிவையும் அவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். இதன் வெளிப்பாடே நாவற்குழியில் இராணுவத் தினரை வழி மறித்தமையும் சர்வதேச மாணவர் பேரவை அலுவல கத்தை முற்றுகையிட முயன்ற இராணுவத்தினருக்கு எதிராக மாணவர்களும், இளைஞர்களும் திரண்டமையாகும்.

இத்தகைய சம்பவங்கள் சிறிலங்கா ஆயுதப் படையினருக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தயாராகி விட்டனர் என்பதன் வெளிப்பாடேயாகும். சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பு மக்கள் மீது புரியக் கூடிய கொடூரச்செயல்களை மக்கள் நன்கு புரிந்து கொண்டிருந்த போதும் வீதிகளில் இறங்கிப் போரிடத் தயாராகியிருப்பதானது தாம் எதற்கும் அஞ்சப்போவதில்லை என்பதன் வெளிப்பாடே ஆகும்.

உலக வரலாற்றில் பல இடங்களில் மக்கள் எழுச்சிக்கு முன் னால் பெரும்பெரும் இராணுவங்கள், பல சர்வாதிகாரிகள் எதிர்த்து நிற்க முடியாது தோல்வியடைந்ததைக்காண முடியும். மக்கள் கிளர்ச்சியின் முன்னால் பெரும் இராணுவங்கள் சிதைந்து போனதும், சர்வாதிகாரிகள் அழிந்து போனமையும் உண்டு. அதாவது மக்கள் எழுச்சிக்கு முன்னால் எத்தகைய ஆயுதங் களும்அடக்கு முறைகளும் வெற்றி கண்டதாக வரலாறு இல்லை.

தமிழ் மக்கள் தமது உணர்வெழுச்சிகளை எழுச்சிப் போராட்டங்கள் என்ற ரீதியில் அண்மைக்காலத்தில் வெளிப்படுத்தி வந்துள்ளனர். சிறிலங்கா ஆட்சியாளர்கள் இதனைக் கண்டு கொண்டதாக இல்லை. இதனை அடுத்து அண்மையில் சிறிலங்கா ஆயுதப் படையினருக்கு எதிராக தமது எதிர்ப்பை வீதியில் இறங்கி வெளிப்படுத்தவும் முற்பட்டு நிற்கின்றனர்.

இதனைச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் கவனத்திற்கொள்ளாது போனால் தமிழ் மக்களின் பேரெழுச்சிக்கு சிறிலங்கா அரசும் அதன் ஆயுதப்படைகளும் முகம் கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி விடும். இதன் விளைவானது நிச்சயமாகச் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பிற்கும், அரசிற்கும் விரும்பத்தக்கதாக இருக்க மாட்டாது.

ஆகையினால் சிறிலங்கா அரசாங்கம் இதனைப் புரிந்து கொள் ளுதல் வேண்டும். இதனை அசட்டை செய்து தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது போனால் கசப்பான அனுபவங்களுடன் விரும்பத்தகாத முடிவையும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டி வரும்.

# சமுர்த்தி நிதி மோசடி தொடர்பாக திசாநாயக்கவிடம் விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தின் சமுர்த்தி நிதி மோசடி தொடர்பாக சிறையில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர் எஸ்.பி. திசாநாயக்கவிடம் விசாரணைநடத்தி அறிக்கைதாக்கல் செய்யுமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

வெலிக்கடை சிறையிலுள்ள எஸ்.பி. திசாநாயக்கவிடம் எதிர்வரும் ஐந்தாம் திகதியிலிருந்து 12ஆம் திகதிகளுக் கிடையில் இது தொடர்பிலான விசாரணையை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று குற்றத்தடுப்பு பொலிசாருக்கு கொழும்பு கூடுதல் நீதிபதி அஜித் அனவரட்ண உத்தரவிடடுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவராக இருந்த பி.ஏ.குசல பெரேரா சமுர்த்தி நிதியான 5,50,000 ரூபாவை மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணையின் போது எஸ்பி. திசாநாயக்க,முன்னாள் சமுர்த்தி அமைச்சுப்பொறுப்பு வகித்ததால் அவரிடமும் விசாரணை நடத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

# அமைதி முயற்சிகளை முன்னெடுக்க இந்தியா உதவி செய்யும்

### -நோர்வே அமைச்சர் எரிக்சூல்ஹெய்ம்

(புதுடில்லி)

இலங்கையில்அமைதி முயற்சி களை முன்னெடுக்கவும் அனுசரணை யாளராக செயற்படவும் உதவி செய்யவும் இந்தியா முன்வந்துள்ளது என இலங்கைக்கான விசேட தூதுவராகப்பணியாற்றியவரும் நோர்வே நாட்டின் அமைச்சருமான எரிக்சூல்ஹெய்ம் தெரிவித்துள் ளார்.இந்தியத் தலை நகரம் புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் சியாம் சரணை எரிக் சூல்ஹெய்ம் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இச்சந்திப்புக்குப் பிறகு ஊடக வியலாளர்களிடம் பேசிய எரிக் சூல்ஹெய்ம், இலங்கையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிக்க வேண்டும். என்பதும் இலங்கையில் முன்பிருந்த மோசமான வன்முறை நிலைகள் எந்தச் சூழலில் திரும்பிவிடக் கூடாது என்பதிலும் இருதரப்பினரும் உறுதியாக உள்ளோம் என்றார். அமைதி முயற்சிகளை முன்னெடுக்க இருதரப்பினரும் உதவி செய் வோம். அனுசரணையாளராக செயற்படுவோம் என்றும் சியாம்சரண் கூறினார்.

இலங்கையின் வடக்கு- கிழக்குப் பகுதி மீளக் கட்டியெழுப்பட வேண்டி யுள்ளது. அதனால் அப்பிரதேசங் களின் பொருளாதார வளர்ச்சிக்கு சர்வதேச உதவிகள் அவசியம் என்றும் சியாம் சரண் தெரிவித் தார். என எரிக்சூல் ஹெய்ம் கூறி னார்.இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனையும் எரிக்சூல்ஹெய்ம் சந்தித்துப் பேசினார்.

# வலுக்குன்றியோருடன் நேசக்கரத்தை த.பு.கழகம் இறுகப் பற்றுகின்றது

### சர்வதேச வலுவிழந்தோர் தினத்தில் த.பு.க.தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச ரீதியில் உள்ள வலுக் குன்றியோர்களுடன் மனிதாபிமானம் என்கிற நேசக்கரத்தைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இறுக்கப்பற்று கிறது. ஒருதலைசிறந்த வலுவூட்டலை வழங்க என்றுமே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் காத்திருக்கின்றது என சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது;

காலங்காலமாய் "ஊனமுற்றவர்" என்றும் "வலுவிழந்தோர்" என்றும் தாழ்த்தப்பட்டு அடக்கப்பட்டு அந்நியப் படுத்தப்பட்டு உலகில் ஒரு பகுதி மக்கள் ஒதுக்கப்பட்டே வாழ்ந்துள்ளனர்.

ஒரு பெரும் பகுதி சமூகமோ அவர்களை எள்ளி நகையாடியது. உடலால் ஊனமுற்றோரை உல கிற்கு உதவாது என்று, பொருளாதார நிபுணத்துவமும் தத்துவமும் சொல்லிச் சொல்லி தமது புத்திஜீவி இருப்புக்களை நிறுவியதோடு அபத்தமான நியாயப்படுத்தல்களை யும் செய்துகொண்டிருந்தனர் மேம் போக்கானவர்கள்.

இவர்கள் போட்ட முத்திரைகள் கால ஓட்டத்தில் கிழிபடலாயிற்று. வரலாற்றில் "உடல் ஊனமுற்றவர்" என்ற சொல்லை யார் பாவிக்கிறாரோ அவரே "ஊனமுற்றவர்" என்று நவீன சமூகவியல் அறிஞர்கள் சொல்கிறார்கள். இதற்கான கார ணத்தை குற்றெழுத்துக் கல்வியும் சைகைமொழியும் மற்றும் கணனிக் கல்வியும் மிகச்செம்மையாகவே உலகிற்கு நிரூபித்துக்காட்டியிருக் கிறது.

இன்று சர்வதேச சமூகம் வலுக் குன்றியோர் ஆண்டை மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறது.

இலங்கைத்தீவில் வாழ்கின்ற வலுக்குன்றியோருக்கும், இதர மற்றும்சர்வதேசத்தில் வாழும் வலுக்குன்றியோருக்கும் வலுவான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பெருமையடைகின்றது.

இலங்கைத்தீவைப் பொறுத்த வரையில் மூவகை வலுக்குன்றி யோர் உள்ளனர்.

பிறவியிலேயே ஏற்பட்டது, போரின் கொடுமையால் ஏற்பட்டது, ஆழிப்பேரலையால் ஏற்பட்டது.

இவர்களுக்கு வலுவூட்டுவது தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தலையாய கடமை. சர்வதேசத்தின் கடமையும் கூட என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது, (லோதீ)

# இலங்கையில் வருடம் தோறும் 2லட்சத்து 40ஆயிரம் கருக்கலைப்புக்கள்

(கொழும்பு)

இலங்கையில் வருடந்தோறும் இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் சட்ட விரோத கருக்கலைப்புக்கள் நடத்தப் படுவதாக தகவல்கள் வெளியாகியுள் ளன.

இதனடிப்படையில் நாள் ஒன்றுக்கு 600 சட்டவிரோத கருக் கலைப்புகள் இடம்பெறுகின்றன.

இதற்கான முக்கிய காரணம் அறியாமையே என மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எனவே இதனைத் தடுக்கும் முகமாக பாலியல் கல்வி வழங்கப் படுவது அவசியம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்த வரையில் சமூக பொருளாதார பிரச்சினைகளால் பாதுகாப்பற்ற கருக் கலைப்புகள் இடம்பெறுவதாக அவர் கள் தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதிலும் வருடந் தோறும் 19 மில்லியன் கருக்கலைப் புக்கள் நடக்கின்றன.

இதில் ஆசியாவிலேயே அதிகள வான பாதுகாப்பற்ற கருக்கலைப்புக் கள் நடத்தப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.இதன் காரணமாக உலகம் முழுவதும் வருடந்தோறும் 210 மில்லி யன் பெண்கள் கர்ப்பம் தரிக் கின்றார்கள். எனினும் 130 மில்லியன் குழந்தை பிறப்புக்களே பதிவுசெய்யப் படுகின்றன.

இந்தத் தகவல்கள் அண்மையில் கெய்ரோவில் நடைபெற்ற மக்கள் தொகையும் அபிவிருத்தியும் என்ற தலைப்பிலான மாநாட்டில் வெளியிடப் பட்டுள்ளன.

# 143 கிராம அலுவலர்களுக்கு யாழ். மாவட்டத்தில் இடமாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 143 கிராம அலுவலர்களுக்கு மாவட் டத்தினுள் இடமாற்றங்கள் அளிக்கப் பட்டுள்ளன.

கடந்த 15ஆண்டுகளுக்குப் பின்னர் இத்தகைய ஒரு இடமாற்றம் நடை பெறுகிறது குறிப்பிடத்தக்கது.

நெடுந்தீவு,மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமை யாற்றும் கிராம அலுவலர்கள் தவிர ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்களில் பெரும்பான்மை யானோர் இடமாற்றங்களுக்குள்ளாக வுள்ளனர்.

சில இடமாற்றமானது எதிர்வரும் 2006 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதிகளில்இருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

55வயதுக்கு உட்பட்டவர்களும் ஐந்து வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ஒரே பிரதேச செயல கத்திலோ, உதவி அரசாங்கஅதிபர் பிரிவிலோ கடமையாற்றிய கிராம அலுவலர்களுக்கும் இந்த இடமாற் றம் வழங்கவுள்ளன..

# சர்வதேச வலுவிழந்தோர் தினத்தில் “வெண்புறா” நிறுவனம் உதவி

(அலுவலகசெய்தியாளர்)

சர்வதேச வலுவிழந்தோர் தினம். வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினால் நேற்று கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் அதன் தலைமைச் செயலகத்திலும் மற்றும் பளை, பூநகரி, புதுக்குடியிருப்பு, மாங்குளம், பனங்காமம், நெடுங்கேணி, கனகராயன்குளம், ஆண்டாங்குளம், பாலம்பிட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தொடர்பகங்கள் மூலமாகவும் இந்த நிகழ்வு நடாத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள வெண்புறா நிறுவனக் கிளைகளிலும் அவ்வப்பகுதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுமார் 900 பேர் வரையிலான வலுவிழந்த குடும்ப உறுப்பினர்கள் இந்த நிகழ்வுகளில் பங்குபற்றியதுடன், அவர்களுக்கென்று ஒழுங்கு செய்யப்பட்ட உணவல்லாத வீட்டுப் பாவனைப் பொருட்களும், கற்றல் உபகரணங்களும் அந்தந்த இடங்களில் நடந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

கிளிநொச்சியில் அமையப்பெற்றுள்ள வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் சந்திரசேகரம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிழக்குப் பிராந்திய இணைப்பாளர் ஜெகா, வெண்புறா நிறுவனத்தின் ஆரம்பகால உறுப்பினரான திருமதி.புஸ்பமலர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். த.பு.க கிழக்கு பிராந்திய இணைப்பாளர் ஜெகா, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடகப்பிரிவைச் சார்ந்த க.ஆதவன், சர்வதேச ஹெயார் நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் கணேசலிங்கம் ஆகியோர் அரிய பல கருத்துக்களை முன்வைத்ததுடன் ஒட்டுமொத்தமாக வலுவிழந்தவர்கள் சமூகத்தின் சகல உரிமைகளுக்கும் உரித்துடையவர்கள் என்றும் அவர்கள் மாற்றுவலிமை படைத்த வல்லுநர்கள் என்பதால் அவர்களும் சமுதாய நீரோட்டத்தில் கலந்துகொள்ளக்கூடிய சகல வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவை என்ற கருத்தினையும் வலியுறுத்திக் கூறினார்கள். பயனாளிகள் அனைவருக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களால் வீட்டுப்பாவனைப் பொருட்களடங்கிய பொதிகளும், கற்றல் உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 105 பயனாளிகள் அன்பளிப்புப் பொதிகளைப் பெற்றுக்கொண்டனர்.(லோ,தீ)

## வடமராட்சி...

அசம்பாவிதத்தையடுத்து அப்பகுதியில் மேலதிக படையினர் குவிக்கப்பட்டுபாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த பரிவர்த்தனை நிலையம் நெல்லியடிக்கும் மந்திகைக்குமிடையே யாழ்-பருத்தித்துறைவீதியோரமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(27,கா)

## இராணுவத்தினர்...

பலாலி வீதியில் உள்ள கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினது மற்றொரு சோதனைச் சாவடி மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. உந்துருளியில் வந்த அடையாளம் தெரியாத இருவர் நேற்றுப் பிற்பகல் இந்தத் தாக்குதலை நடத்தினர்.

## இரு தமிழர்கள்...

ஈடுபட்டனர். தமிழர்கள் மீது வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியதில் இருவர் கத்தி வெட்டிற்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். கொல்லப்பட்டோரில் ஒருவர் பள்ளிக்குடியிருப்பைச்சேர்ந்த இளங்கோ (வயது-38) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். படுகாயமடைந்த இராமலிங்கம் (வயது-48) திருமலை மருத்துவமனையில் நினைவிழந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிலைமையைக் கட்டுப்படுத்த மேலதிக சிறிலங்காப் பொலிசார் திருகோணமலை மாவட்டத்தின் ஏனைய நிலையங்களிலிருந்து தோப்பூர் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வன்முறைக் கும்பல்களைக் கலைக்க பொலிசார் மேல்நோக்கி வேட்டுக்களைத் தீர்த்து கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதாக மக்கள் தெரிவித்தனர்.

## ஐரெனி...

தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகத்தில் நேற்று ஒன்று முப்பது மணியளவில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் பணிப்பாளர் திருமதி ஐரெனிகான் அவர்களும் அவரது குழுவினரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது காவல்துறையின் செயற்பாடுகள் பற்றியும், அவர்களின் நடவடிக்கைகளில் மனித உரிமைகள் எவ்வாறு மதிப்பளிக்கப்படுகிறது என்பன உள்ளிட்ட விடயங்களையும் கேட்டறிந்தார்.

இதில் தமிழீழ காவல் துறைசார்பாக தமிழீழ காவல்தறைப் பொறுப்பாளர் பா.நடேசன், காவல்துறையின் நிர்வாகப் பொறுப்பாளர் கானகன் உட்பட்டவர்கள் கலந்து கொண்டனர். சர்வதேச மன்னிப்புச்சபையினர் சீர்திருத்தப் பிரிவுக்கும் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளையும் சந்தித்துப்பேசியுள்ளனர்.(லோ,தீ)

## யுத்தநிறுத்த...

அதிகரித்து வரும் கொலைகள், குறைந்த வயதுடையோர் படையில் சேர்ப்பு ஆகிய விடயங்களில் தமது கவலையைத் தெரிவித்த ஐரெனி சுபைடா கான், வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய கண்காணிப்புக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகவும் தனது கருத்துக்களை சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பகிர்ந்துகொண்டார்.

ஐரெனிசுபைடாகானின் கருத்துக்குப் பதிலளித்த சு.ப. தமிழ்ச்செல்வன், அரச பயங்கரவாதத்திற்கு எதிராக தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் நியாயத் தேவையை விளக்கினார்.

மேலும் சட்டத்திற்கு அப்பாலான படுகொலைகள், மனித உரிமைகள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டும் இந்தவியடங்களுக்கு முன்னுரிமை அளித்தும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் தேவையைக் கருத்தில் கொண்டும் அதை முழமையாகச் செயற்படுத்துவதில் உறுதியாக உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் அரசியல் தலைமை இருப்பதாகவும் கூறினார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து சு.ப. தமிழ்ச் செல்வன் மேலும் கூறியதாவது,

பேச்சுக்களினூடாக உரிய அரசியல் தீர்வை உருவாக்குவதற்கான அமைதி முயற்சிகளில் முக்கியமானதாக யுத்தநிறுத்த ஒப்பந்தம் இருக்கிறது.

கடந்தகால யத்தநிறுத்த ஒப்பந்தங்களின் அனுபவங்களைக் கவனத்தின் கொண்டு மிக அவதானமாக நீண்டகாலம் விவாதித்தே இந்த புதிய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக போரினால் இடப்பெயர்வுக்குள்ளான மக்கள் தங்களது இயல்பு வாழ்க்கையை மீள மேற்கொள்வதற்காக தெளிவான வரையறைகளும் கால எல்லைகளும் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன. இந்த கால எல்லைகள் எல்லாம் வெகுகாலத்துக்கு முன்பே காலாவதியாகிவிட்டன. இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தால் எதுவித பயனும் ஏற்படவில்லை என்றே தமிழ்மக்கள் கருதுகின்றனர்.

தமிழர்களின் மீதான சிறிலங்கா இராணுவத்தினது தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு நீடிக்கிறது. தமிழ் மக்களின் கடலோரப் பிரதேசங்களும், விவசாய நிலங்களும், அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழர்களின் வாழ்வதற்கான அடிப்படை மனித உரிமை கூட மறுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலைமைகளாலும், ஆழிப்பேரலை மற்றும் சிறிலங்காவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும் தமிழ்மக்கள் விரக்தி நிலையில் உள்ளனர். தமிழர்கள் தாங்கள் ஒருவித அரசியல் வெறுமைக்குள் சிக்க வைக்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றனர்.

தமிழர்தாயகத்தில் சிறிலங்கா இராணுவத்தினது ஆக்கிரமிப்புப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்திற்குரியது. அந்தப்பகுதிகளில் நடைபெறும் குற்றச் செயல்களுக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினராகிய தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாக முடியாது.

இருப்பினும் அத்தகைய வன்முறைகளுக்கு சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அவர்களோடு சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களுமே காரணம் என்பதை நாம் அறிவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்மீது அவதூறு பரப்புவதற்கான அரசியல் செயல் திட்டமாகவே, விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்கள் என அடையாளம் காணப்படுகிற தனிநபர்களைச் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் இவர்கள் சுட்டுக்கொல்கின்றனர். இதையே இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் எமக்குச் சுட்டிக் காட்டியுள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.8ன் படி இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைய வேண்டும். இதற்குரிய சரத்தை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதே எங்களது அழுத்தமான வலியுறுத்தலாகும். இது போன்ற சரத்துக்களைத்தீவிரமாகச் செயற்படுத்துவது குறித்து உடனடிப் பேச்சுக்களை இருதரப்பினரும் மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தி யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மீதான எமது உள்ளார்ந்த ஈடுபாட்டை நாம் வெளிப்படுத்துகிறோம்.

இந்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய வேண்டிய எதுவிதத்தேவையும் இப்போது இல்லை. சிறிலங்கா அரசாங்கத்தால் இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் முழுமையாக உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயற்படுத்தப்பட்டாலே இருதரப்பு நம்பிக்கை கட்டியெழுப்பப்படுவதோடு, வன்முறைகளும் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு தமிழ் மக்களும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியும். இதற்குரிய அனைத்து அம்சங்களும் இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளன.

இந்த உண்மை நிலைகளை சிறிலங்கா அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப்புச்சபை விளக்க வேண்டும். சிறாரைப் படையில் சேர்க்கிறார்கள் என்ற இல்லாத ஒரு குற்றச்சாட்டை தொடர்ந்து கூறிக்கொண்டு மனித உரிமை மீறல்களிலும் தமிழ் மக்கள் அமைதியாக வாழ்வதற்கான சூழ்நிலையை நிராகரிப்பதையும் சிறிலங்கா அரசாங்கம் மேற் கொண்டு வருகிறது.

தமிழர்தாயகப் பகுதி முழுமைக்கும் சர்வதேச மன்னிப்பச்சபையின் கண்காணிப்புக் குழுவினர் பயணம் செய்து மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளுக்கு எதிராக சிறார் படையில் சேர்க்கப்பட்டுள்ளனரா என்பது குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான கொலைக் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் உரிய விசாரணை நடத்தலாம் என்று அழைப்பு விடுக்கிறோம். மேலும் சிறிலங்கா அரசாங்கம், ஊடகங்கள், பேரினவாதக் சக்திகளின் ஒருபக்க சார்பான குற்றச்சாட்டுக்களை விட தமிழர் தாயகத்தில் இயங்கும் மக்கள் அமைப்புக்கள், மதத் தலைமைகள், அரசசார்பற்ற நிறுவனங்களுடன் விவாதித்து உண்மைத்தன்மைகளைக் கண்டறிய வேண்டியதும் அவசியமானது என்றார் தமிழ்ச் செல்வன்.

கிளிநொச்சியில் வடக்கு-கிழக்கு மனித உரிமைச் செயலகமான நிசோர் பிரதிநிதிகளையும் சந்தித்த சர்வதேச மன்னிப்புச் சபையின் இயக்குனர் ஐரெனி சுபைடா கான், நிசோரின் செயற்பாடுகளையும் கேட்டறிந்தார்.

நிசோர் அமைப்பினது பணியாளர்கள் எண்ணிக்கை, நிசோருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள், தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகளின் விபரங்களையும் அவர் கேட்டறிந்தார். முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டது எவ்வாறு என்பதையும் நிசோர் பிரதிநிதிகள் , ஐரெனி சுபைடா கானுக்கு விளக்கம் அளித்தனர்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான உத்தேச தமிழீழச் சட்டங்கள் குறித்தும் இச்சந்திப்பின் போது விளக்கப்பட்டது.(லோ,தீ)


# இயலவிற்பனை

**இடம்:சிங்கர் சீர்மை அருகாமை, யாழ்.சாலை, கிளிநொச்சி.**

**எவ்வகைப்பொருட்கள்:-**
- ☐ இலத்திரனியல் பொருட்கள்
- ☐ அழகுசாதனப் பொருட்கள்
- ☐ புடைவைகள்
- ☐ உதிரிகள்

**காலம்:-2005.12.07**

**மேலதிக விரிப்புக்களை நாளை எதிர்பாருங்கள்**

(சி.13421)


# சாவு அறிவித்தல்



பிறப்பு 22 • 06 • 1936

இறப்பு 03 • 12 • 2005

## சின்னத்தம்பி சிதம்பரநாதர்

(விசக்கடி வைத்தியர்)

இடைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும், கலவெட்டித் திடல் புளியம்பொக்கணையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரநாதர் (விசக்கடிவைத்தியர்) அவர்கள் 03.12.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் சின்னத்தம்பி குஞ்சுப்பிள்ளை அவர்களின் அன்புப்புதல்வனும், வள்ளியம்மையின் அன்புக்கணவரும், சிவகாமி, அம்பலவாணர் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற அம்பலவாணர், அருணாசலம் ஆகியோரின் மைத்துனரும், விக்னேஸ்வரி(வவுனியா), தாணியலட்சுமி, விக்னேஸ்வரன் (லிங்கம்), பேரின்பமூர்த்தி (லண்டன்), சந்திரேஸ்வரி, சோதிஸ்வரி, கோதை, ஜிதுர்மா ஆகியோரின் தந்தையும் ரவி குலசிங்கம் (வவுனியா), கமலாவதி(கண்டாவளை), நிதியா (லண்டன்), ஜெயராசசிங்கம் (சிவலோகநாத குருக்கள், கிளி. உதயநகர், இத்தியடி, சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு) ஆகியோரின் அன்பு மாமனாரும், நுகர்சனா விதுர்சனா, பவேசன், தவிதா, கஜீபன், கருசனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (4.12.2005)மு.ப 11.00 மணிக்கு கலவெட்டித்திடல் நெடுமோட்டை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:-

**மகன்**

**விக்னேஸ்வரன் (லிங்கம்)**

(6438)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.